# பாதை

FRANCISCAN MISSIONARY BROTHERS


ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள், அவருக்காகப் பாதையைச் செம்மையாக்குங்கள்

- (மத் 3:3)


பாதை 3 | சித்திரை - வைகாசி - 2006 | பயணம் 13


# அனைத்து மக்களும் இறைவனின் பிள்ளைகளே!

மன்னார் ஆயர்

**மன்னார் மறைமாவட்டத்தின் செட்டிகுளப் பங்கில் புனித பிரான்சிஸ் தொழில்நுட்பக் கல்வி நிலைய அடிக்கல் நாட்டுவிழா (19.03.2006) மன்னார் ஆயரின் ஆசிருடன் நடைபெற்றது. பிரான்சிஸ்கன் மறைபரப்பு சகோதரர்களின் பணியில் வளர்ச்சிப் பாதையில் இன்னுமொரு முயற்சிக்கு அடித்தளமாக இவ்வைபவம் அமைந்தது.**

மேதகு அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களை வரவேற்று மாகாணத்தலைவர் அருட்சகோ ஜெரோமி கிறிஸ்ரி தலைமையுரையாற்றுகையில் -



பிரான்சிஸ்கன் அருட்சகோதரர்கள் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்குமக்கள் இனமத பேதமின்றி மன்னார் மறைமாவட்ட ஆயர் தொழில்நுட்ப நிலையத்தின் அவசியத்தை உணர்ந்து இவ்விடத்தில் தொழில்நுட்ப கல்வி முயற்சியை எடுக்கின்றோம் எமது சபையின் முதல் முயற்சி மன்னார் மறைமாவட்டத்துக்கு கிடைத்துள்ளது. விசேடமாக இப்பிரதேசத்துக்கு கிடைத்தையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். எனக் கூறினார்.

தொடர்ந்து பிரதம விருந்தினராக கலந்து இறை ஆசீர்வழங்கிய மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை புனித சூசையப்பரை நினைவுகூர்ந்து கொண்டாடும் இன்நாளில் மன்னார் மறை மாவட்ட மக்களுக்கு தொழில்நுட்ப கல்வி சிறக்க அடிக்கல் நாட்டுவது சிறப்பான செய்தியாகும். அனைத்து மக்களும் இறைவனின் பிள்ளைகளே. இனமத பேதம் மறந்து பிரான்சிஸ்கன் சகோதரர்கள் எடுக்கும் இம்முயற்சி பயன் அடைய ஒன்றிணைந்து செயற்படுவோம். இது எமது கிராம மக்களுக்கு தற்கால தேவையாகும்.

'இது ஒரு சொத்து' இத் தொழில்நுட்ப நிலையம் வெளிநாட்டின் குறிப்பாக இந்தியாவில் உள்ள பிரான்சிஸ்கன் தொழில்நுட்பக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டு முன்னேற்றம் காணப்பட வேண்டும். எதிர்கால இளம்சந்ததியினர் இதன் மூலம் சமுதாயத்தில் முன்னேற்றம் காண வேலைவாய்புக்கு வழிவகுக்கும் என்பதே எனது ஆவல். இப்பணி சிறக்க இறை ஆசீர் அருளி வாழ்த்துகின்றேன் என்றார்.

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)



HAPPY EASTER

## சமாதானத்துக்காக செபியுங்கள், செயற்படுங்கள்

நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியற்ற சூழலால் துன்புறும் மக்களுக்காக செபியுங்கள், எமது நாட்டின் அமைதி - சமாதானம் மலர அன்புப் பணிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு அமைதியின் கருவிகளாக செபத் திலும், தபத்திலும், ஈடுபடுங்கள் உயிர்களின் மகத்துவத்தை உணர்ந்து வன்முறைச்சாவுகளில் இருந்து மக்களை காக்க வழிகாட்டிகளுக்காக செபியுங்கள். செயற்படுங்கள்.

# மனிதத்தை சிதைக்கும் மது போதையை ஒழிப்போம்.




## குருநகர் மக்கள் பேரணியின் குரல் ஒலி

மாணவர் குரல் எழுப்ப, மதத் தலைவர்கள் வழிகாட்ட, குருநகர் மக்களே திரண்டு எழுந்து சுலோக அட்டைகளுடன் பிரதான வீதியில் அணிவகுத்து மக்களே விழிப்பூட்டி அரச செயலகம் வரை அணிதிரண்டனர், அறிக்கை சமர்ப்பித்தனர்.

மிகப்பெருந்தொகையான மக்கள் வாழும் இக்கிராமத்தினுள் ஐந்து ஆலயங்கள் பல வழிபாட்டுத் தலங்கள், மூன்று பாடசாலைகள், நான்கு முன்பள்ளிகள், சந்தை, இன்னும் பல நல்வழிக்கழகங்கள் நிறைந்துள்ள இவற்றின் இடையிடையே மிக அருகாமையில் திடீரென பல மதுபான விற்பனை நிலையங்கள் எழுந்துள்ளதால் இவை பொதுநல வளர்ச்சிக்கு பெரும் தடையாக உள்ளன என்பதில் மக்கள் விழிப்புணர்வு கொண்டு இவற்றை அகற்ற தாமே பல நடவடிக்கைகளை முன்னெடுத் துள்ளார்கள்.

எனவே மக்களின் இந்த துரித முயற்சியை தட்டிக்கழிக்காது நாட்டினதும், மக்களினதும் வளர்ச்சியில் அக்கறை செலுத்துகின்ற நாட்டின் நிதி, நீதி, நிர்வாக மற்றும் அரச, அரச சார்பற்ற, தனியார் அமைப்புக்கள் அனைத்திற்கும் நாம் இந்த வேண்டுகோளை விடுக்கின்றோம். என அரச அதிபருக்கும், யாழ் ஆயர், நீதிபதிகள், அரசியல் நிர்வாகிகளிடம் மகஜரை சமர்ப்பித்தனர்.

குருநகர் யாகப்பர் பங்கில் மகாஞான ஒடுக்கம் பங்குனி 1ம் திகதி முதல் சித்திரை 8ம் நாள் வரை இல்லத்தரிசிப்புக்கள், இறைவழிபாடுகள், சமூக, சமய, கலாச்சார, தொழில் தடைகளை இனம்கண்டு ஆன்மீகத்தில் நிலைத்திருக்கும் நற்சமூகம் மலர பங்குத்தந்தை சகாயநாதன், உதவிப் பங்குத்தந்தை தயாபரன், பக்திசபைகள், தொழில் அமைப்புகள் பாடசாலைகள், ஆலய சபையினர்களின் அர்ப்பணிப்புடன் அமல மரித்தியாகிகள் நெறிப்படுத்தலில் புத்தெழுச்சிபெற்ற மகாஞான ஒடுக்கத்தின் வெற்றி மக்கள்பங்கேற்புக்களே என்பதை வெளிப்படுத்தியது. (தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

## சிறுகதை, கவிதை போட்டி

முத்திப்பேறுபெற்ற யோசவ்வாஸ் அடிகளாரின் புனித நிலைக்கு உயர்த்தும் செபவழிபாடுகள், தியானங்கள், ஒன்று கூடல்களை நடாத்திவரும் புத்தளம் பங்கு மக்களின் அயராத முயற்சியின் பயனாக அகில இலங்கை மக்கள் கலந்து கொண்டு இலங்கையின் புனிதராகிய யோசவாஸ் நினைவாக சிறு கதை, கவிதை போட்டிகளை நடாத்துகிறார்கள்.

இப்போட்டியில் ஆர்வமுள்ள எவரும் பங்குபற்றலாம். இப்போட்டியின் விதிகள் தொடர்புகள் பற்றிய விபரம் பாதையின் உள்ளே காணலாம். ஆன்மீக ஆர்வத்துடன் எமது வரலாற்று தடங்களின் பதிவுகளை சகலரும் சுவைக்க இன்றே எழுதுங்கள், எழுத தூண்டுங்கள், புதிய சிந்தனைகளை அனுப்புங்கள்.


வாசக நேயர்களுக்கு ஈஸ்ரர் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்




## செட்டிகுளத்தில் புனித அசிசி கல்வி நிலைய திறப்பு விழா

மன்னார் மறைமாவட்டத்தின் செட்டிகுளப்பங்கில் கடந்த 2006. 02.01ம் திகதி புனித அசிசி கல்வி நிலைய திறப்பு விழா இடம் பெற்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாகக் குழு அங்கத்தவர்கள் அனைவரும் அருட்சகோதரர்களின் பணி மனையில் ஒன்றுகூடினர். பங்குத் தந்தை ஸ்ரீபன்ராஜ் அடிகளாரின் இறைவணக்க ஆசியுடன் அருட் சகோதரர் நியுட்டன் நாடாவை வெட்டி கல்விக் கூடத்தை திறந்து வைத்தார்.

பங்குத் தந்தை உரையாற்றுகையில் -

புனித பிரான்சீஸ்கன் சகோதரர்கள் ஆரம்பித்த கல்விகூடலுக்கான இப்பணியை எமது மாணவர்கள் நன்கு பயன்படுத்துதலே இப் பணியின் வெற்றியாக அமையும் எமது பிரதேசத்தின் தேவை உணர்ந்து இச்சேவையை மேற்கொள்ளும் பிரான்சிஸ்கன் பணி சிறக்கவாழ்த்துக்கள் என்றார். அதன்பின் செட்டிகுளம் ம.வி.அதிபர் S.யேசுதாசன் தனது



உரையில் அருட்சகோதரர்களின் அயராத முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிறுவனத்திற்கு வாழ்த்துவதுடன் செட்டிகுளம் வாழ் மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பு நிறைவேறி உள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

அடுத்து அருட் சகோதரர் நியுட்டன் அவர்கள் தமது உரையில் இலை மறை காய்போல் இருக்கும் மாணவர்களின் திறமைகளை வளர்ப்பதுதான் இக் கல்விக் கூடத்தின் முக்கிய நோக்கம். இக் கல்வி நிறுவனம் மென் மேலும் வளர்ச்சி அடைவதற்கு ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் ஒத்துழைப்பும் ஊக்கமும் தேவை என்றும் கேட்டுக்கொண்டார். இறுதியாக அருட்சகோதரர் மில்றோய் அவர்களின் நன்றி உரையும் மாணவர்களின் உற்சா கப்பங்களிப்புடன் திறப்பு விழா இனிதே நிறைவுற்றது.

### பிரான்சீஸ்கன் அருட்சகோதரர்களின் இடமாற்றங்கள்

| பணியாற்றிய இடம் | புதிய பணித்தளம் |
|---|---|
| அருட்சகோ: மாக் பதுளை | - குருக்கள் மடம் அசிசி இல்ல ஆன்மீகபணி |
| அரட்சகோ: குரூஸ் பதுளை | - உக்குவெல தோட்டம் |
| அருட்சகோ: தோமஸ் உக்குவெல | - மாத்தளை தியான இல்லம் |
| அருட்சகோ: மெல்சன் மாத்தளை | - சிலாபம் கணனி பயிற்சி மையம் |
| அருட்சகோ: யஸ்ரஸ் தலவாக்கல | - மாத்தளை தியான இல்லம் |
| அருட்சகோ: ஞானப்பிரகாசம் சிலாபம் | - தலவாக்கல சென்பற்றிக்ஸ் நிலையம் |
| அருட்சகோ: தோமஸ் மத்தியூ சிலாபம் | - மாத்தளை கணனி பயிற்சி நிலையம் |
| அருட்சகோ: மோசஸ் மாத்தளை | - மாத்தளை நவசன்னியாச பயிற்சி இல்லம். |
| அருட்சகோ: றூபன் மக்கோனா | - மாத்தளை சிறுவர் இல்லம் |
| அருட்சகோ: சகாயநாதன் மாத்தளை | - மக்கோனா சிறுவர் இல்லம். |

### புனித தினமே மேதினம்

உலகம் வாழ உழைப்பவர்
உயர்வைக் கூறும் மேதினம்
உறவுக் கரங்கள் பிணைப்பவர்
உணர்வைக் காட்டும் மேதினம்
மனித வளத்தின் மேன்மைகூறும்
மகத்துவ நாளே மேதினம்
புனித வளனைப் போற்றிடும்
புனித தினமே மேதினம்.

-அதிர்ராஜன்.

## உழைப்பாளி உயர்ந்தவன் ஆகிறான்

புதிய உலகை படைப்போம் என்று உரத்து குரல்கொடுத்தாலும் அதன் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிப்பவன் கடின உழைப்பாளியான தொழிலாளியே. அவன் தன் தொழிலின் மகத்துவத்தை உயர்வாக நினைத்து பணிசெய்யும் போதுதான் உழைப்பாளி உயர்ந்தவனாகிறான். இறை இயேசுவை தச்சனின் மகன் என ஏளனம் செய்தபோது அவர்தன் தொழிலின் மீது அமைச்சலுடன் தந்தை சூசையப்பரின் சீடனாக தன் தொழிலில் அக்கறையுடன் பணி ஆற்றியதை சரித்திரம் கூறும்.

பாட்டாளியின் பங்காளனாக தொழிலாளியின் பாதுகாவலராக புனித சூசையப்பரை திருச்சபையால் நினைவு கூரப்பட்டு மே 1ம் திகதியை தொழிலாளர் தினமாக திருச்சபை கொண்டாடி மகிழ்கிறது. இன்று எமது நாட்டில் எமது தொழிலின் மகத்துவத்தை நாமே மதிக்காதபோது பிறரிடம் அதன் சிறப்பை, பெருமையை எப்படி உணர்த்த முடியும்.

"செய்யும் தொழிலே தெய்வம்" என்ற முன்னோர் கூற்றுக்கமைவாக தொழிலாளர் தினத்தில் தமது தொழிலின் உபகரணங்களுடன் அணி அணியாக பவனிவந்து காணிக்கையாக்கி புனித சூசையப்பரின் தின வழிபாட்டில் சிறப்பாக இணைந்து முன்னோர் விழா எடுத்தனர். கடல் தொழில், விவசாயத் தொழில், தச்சுத் தொழில், சாரதி தொழில், தையல் தொழில் என நீண்டு செல்லும் தொழிலின் ஏதோ ஓர்வகைக்குள் ஈடுபட்டுவரும் மக் களின் சக்தி அதிகமாக இருந்தும் தொழிலாளரின் ஆற்றல், திறமை, மகத்துவம் உணரப்பட்டு தொழிலாளர் ஐக்கியப்பட்டு குரல்கொடுக்க முன் வரும்போது தொழிலாளர் சக்திக்கு நிகராக எதுவுமே முன்நிற்க முடியாது. சக்தி படைத்த தொழிலாளர் வர்க்கம் தம் தொழிலின் சிறப்பை, மகத்துவத்தை பெருமையுடன் மதிக்கும் நிலையும் தொழிலாளரிடையே நல்லுறவும், சக்தியும், ஒற்றுமையும் மேலோங்குவதாலேதான் தொழிலாளர் உரிமையைப் பெற்று கௌரவத்துடன் வாழமுடியும்.

எட்டுமணிநேரப் போராட்டம் வெற்றிபெற உழைத்ததன் நினைவாக தொழிலாளர் தினம் பிறக்க வழியானது. அச் சிறப்பை, மகிமையை காத்து எமது எதிர்கால சந்ததியும் உணர்ந்து அனுபவிக்க இன்று நாம் சிந்திப்போம். எமது தொழிலின் மீது நாம் கொள்ளும் பற்றுறுதி, மதிப்பு அதனால் பெறும் உழைப்பின் ஊதியமே எம் குடும்ப வாழ்க்கைக்கும் உதவுகிறது. எம்மை வாழவைக்கும் தொழில் புனிதமானது. அத் தொழிலில் வியர்வை சிந்தி உழைத்து வாழ பாதுகாத்துவரும் இறைவனுக்கு நன்றி பகிர்வோம். உழைப்பாளி என்ற பெருமையை உயர்ந்த சொத்தாக போற்றுவோம்.

நாம் தண்டி வாழவில்லை, அண்டி வாழவில்லை, உழைத்து உண்டு உவகையுடன் வாழ எம் தொழிலாளர் வர்க்கம் ஒன்றுபட்டு வாழ்கிறது என் பதை உலகுக்கு வெளிப்படுத்தும் போதுதான் உழைப்பாளி உயர்ந்தவனாகிறான். அந்த உயர்வுக்காக எம்மை வழிகாட்டும் இறைவனின் தூதன், தொழிலாளரின் பாதுகாவலரான புனித சூசையப்பரின் பரிந்துரையும் இறைவனின் பாதுகாப்பும் அருளும் பெற தொழிலாளர் மே தினத்தை அர்த்தமுள்ளதாக்குவோம்.

செயோன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதையின் பார்வையில்.....

PATHAI

புனித பிரான்சிஸ்கன் நவசன்னியாச இல்லம், வட்டக்கழி,சிலாபம்.

## உங்களுக்கு சமாதானம்

பாரச் சிலுவை தாங்கிச் செல்லும்
தூரப் பயணம் தொடர்கிறது
பாதை மாறாது பயணம் தொடர
நாளும் தொடரும் நினைவுகள் - இதோ
ஆண்டுகள் இரண்டாயிரம் கடந்தும்
இயேசுவின் பாடுகளை சிந்திக்கிறோம்.

கற்றூனில் கட்டியவர் யார்?
கசையடி கொடுத்தவர் யார்?
முள்முடி தரித்தவர் யார்?
மூன்றாணி அறைந்தவர் யார்? என
தினமும் தியானித்து மனதுருகி
மீட்டுப் பார்க்கின்றோம்
தவக்காலத்தினை அருட்காலமாக
செப,தப தியானங்களில் நிலைக்க
மறையுரையும், வழிபாடுகளும்
போதனைகளும் யாருக்கு
யாரால் எப்படி எனவெல்லாம்
தேடி, கேட்டு மனம்மாற்ற
வார்த்தைகள் மனங்களில் பதிவாகி
பதில் தேட முனைகிறோம்

காட்சிப்படுத்தல் அரங்கேறி
அதிலும் தீர்ப்புக் கூறும்
பார்வையாளராய் மதிப்பிட்டு
புள்ளியிடும் மனங்களாய்
மறையுரையும், வழிபாடும்
காட்சிப்படுத்தலும்
களியாட்ட நிகழ்வாகிப் போனதா?
இல்லை இல்லை இல்லவே இல்லை.

இவை தொலைக்காட்சி
நாடகங்கள் அல்ல
கற்பனைக் காவியங்கள் அல்ல
எம் ஆன்மீகத்தின் விசுவாசத்தால்
முன்னோர் பக்தியுடன் எமக்கு
விதைத்து வேரூன்றி விருட்சமான
திருச்சபையின் விசுவாசஉண்மை சம்பவமே.

எம் முழுமனித விடுதலைக்காய்
தம்முயிர் ஈந்த பரமனின்
பாடுகளின் பாதையில் பயணிக்கும்
மக்களின் மனங்களில் மனமாற்றமே
விசுவாச வெளிப்பாடாக வேண்டும்
கற்றூனில் கட்டியது
கசையடி கொடுத்தது
முள்முடி தரித்தது
மூன்றாணி அறைந்தது
யார் யாராக இருக்கும்
என தேடி அலைய வேண்டாம்
எம் பாவத்தின் சுமைகளினாலே
பாரச் சிலுவையை தாங்கிய
கோரப் பயணம்தான் அது
கொல் கொத்தா மலை மீது சென்று
கொலை செய்த காட்சிகள் யாவும்
பாவச் செயல்களினாலே நாம்
இன்றும் சிலுவை சுமக்கவும்
சித்திரவதை செய்யவும்
கொலைக்களம் வரை பாரச்சிலுவை சுமக்க
வைக்கின்றோம் என்பதை உணர்வோமா?
அன்று நடந்தது நிஜக்கொலை
இன்று நடப்பதும் அதே கொலைதான்
வடிவங்கள் தான் வேறேயொழிய
செயல்களோ ஒன்றுதான்
இறைவனின் சாயலே மனிதன் என்றால்
எமது மனித பலவீனத்தால்
இறை சாயலில் உள்ள மனிதரை
எப்படி எல்லாம் தண்டனை கொடுக்கிறோம்
வார்த்தையால், வஞ்சகத்தால்,
பகைமையால், பாசமற்ற தொடர்பாடலால்
வக்கிரமான எண்ணங்களால்

அபகரிப்பு, அதிகாரத்தனம்
அபாண்டப் பழிகளால்
கருச்சிதைவுகள், மறைவான கொலைகள்,
வதந்திப் பேச்சுக்கள்
எங்கள் நிலைகளைத் தாண்டி
போலி முகமூடிகள் போட்டு
தெரிந்தும், தவறுகளைத் தொடர்ந்தும்
செய்யும் போது
எமது செயல்களே
கசையடி, முள்முடி, சிலுவைக்கொலைகளாக
எண்ணத்தால், செயல்களால்
தினமும் பாவச்சுமைகளை சுமந்த
சிலுவைச் சாவுக்கு இழுத்துச் செல்கிறோம்
இக்காலத்தில் எம்மைப் புடமிட
எப்போ சந்தர்ப்பம் கொடுத்தோம்

எந்தத் தீயதைக் களைந்தோம்?
என்ன நல்லதைச் செய்தோம்?
ஒரு கணம் சிந்திப்போம்
ஒரே ஒரு கணம் மனதுருகி
உற்றுநோக்கி
சிலுவையின் காட்சியை
மனதில் நிறுத்தி அந்தகாயங்களில்
ஒன்றை, சிலதை களைய
மனதார தீர்மானம் எடுத்து
நடைமுறைப்படுத்துவோம்

எதுவுமே இல்லை என
பொய் முகமூடி இடாது
மனதுருகி சிலுவையில் தொங்கும்
யேசுவின் உருவினை
மனதில் நினைத்து காயத்தை களையும்
நல்ல மனமாற்றத்தை தியானிப்போம்
இதுவே நேரம், இதுவே காலம்,
[illegible]ன் தீயவற்றில் இருந்து இறந்தாலே
நல்லவற்றால் உயிர்க்க முடியும்



கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும் (1 கொரி 15:14)

உணவும், உடையும், விருந்தும்
உயிர்ப்பு விழாவாகி விடாது
மாறாக தினம் எமது வாழ்வினில்
ஏற்படும் மனமாற்றத்தால் உயிர்த்து
மற்றவரை மகிழ்விப்பதில் - என்றும்
உயிர்ப்பில் மகிழ்வைக் கொண்டாடுவோம்
பகைமை கொண்ட ஒருவரை ஏற்றுக்கொள்
துன்புறும் ஒருவருக்காவது அன்பைப்
பகிர்ந்துகொள்
இச் செய்தியை ஓர் அழைப்பாக ஏற்றுக்கொள்
அந்த நல்ல வாழ்வை
அந்த நல்ல நாளை
சுவைக்கும் போது
பலரது உயிர்ப்புக்கு தன்வாழ்வை
தந்த பரமனின் அமதி சமாதானம்
எம் எல்லோருக்கும் தங்கும்
அந்த அமைதியின் கருவியாக மாற
உயிர்ப்பு வாழ்த்துக்கள்
உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக.

# உயிர்ப்பு

உயிர்ப்பு கிறிஸ்தவ நம்பிக்கையின் ஆணி வேர். "கடவுள் இயேசுவை உயிர்த்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள்" (தி.ப 2:32) என்று திருத்தூதர்கள் சான்றுரைத்துள்ளனர். இதன் அடிப்படையில் "அவர் உயிர்த்தெழுந் தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம்" (உரோ 6:5) என்று நம்புகிறோம்.

கிறிஸ்து முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார் (1கொரி 15:20) அதற்குமுன் (பழைய ஏற்பாட்டில்) யாரும் உயிர்த்தெழுந்ததில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. அப்படியானால் இயேசு வாழ்வதற்கு முன் வாழ்ந்த பழைய ஏற்பாட்டு மக்கள் உயிர்ப்பைப் பற்றி அறிந்திருந்தார்களா? உயிர்ப்பில் நம்பிக்கை எப்பொழுது எப்படி ஏன் எதன் அடிப்படையில் ஆரம்பித்தது? போன்ற கேள்விக் கணைகள் நியாயமானவை, நியாயமான வினாவுக்கெல்லாம் விடைகாண விளைவதுதானே விவேகம்?

உயிர்ப்புப் பற்றிய ஒருவரது எண்ணத்தை அறிந்துகொள்ள வாழ்வு மற்றும் மரணம் குறித்து அவரது அணுகுமுறை என்னவென்று தெரிந்து கொள்ளுதல் அவசியம் எனவே முதலில் பழைய ஏற்பாட்டு மக்கள் மனித வாழ்வையும் மரணத்தையும் எப்படிப் புரிந்து கொண்டார்கள் எனப் பார்ப்போம்.

இவர்கள் வாழ்வே மாயம் என்றன்று மாறாக இவ்வுலக வாழ்வு மட்டுமே உண்மையென நம்பினர். மனித வாழ்வு என்பது கடவுள் கொடுத்த கொடைகளுள் தலை சிறந்தது. தன்னிகரற்றது (யோபு 2:4 சஉ 9:4) அத்தகைய வாழ்வை சிறப்புடன் வாழ, கடவுளின் கைவண்ணத்தால் உருவான இவ்வுலகைத் தவிர வேறு ஓர் இடம் இருக்க முடியாது (சஉ 9:1 - 10) எனவே ஒருவர் செல்வச் செழிப்போடு மனைவி மக்களைப் பெற்று, நலமுடன் நீண்டநாள் வாழ்ந்தால் அவர் ஆண்டவரின் ஆசியை நிரம்பப் பெற்றிருக்கிறார். அவர் ஒரு நீதிமான் என்று கருதினர் (யோ 8:6, திபா 128)

பாவம் செய்யும் உயிரே சாகும். (எசே 18:4) என்ற கோட்பாட்டைக் கொண்டிருந்தனர். அதே சமயம் படைக்கப்பட்ட யாவரும் ஒருநாள் மரணத்தைச் சந்தித்தே ஆக வேண்டும். இது இயற்கை நியதி மனித வாழ்வின் அதிபதி கடவுளே (1 சாமு 2:6) என்றும் நம்பினர். ஆனாலும் நல்ல மரணம் என்பது கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாயிருந்தது.

வாழ்ந்து சலித்த பிறகு முதிர்ந்த வயதில் தான் இறக்க வேண்டும். (தொ நூ 15:15, யோபு 2:17)

இளம் வயதில் இறப்பதென்பது கடவுளின் தண்டனையைக் குறிக்கும் (திபா 103:24, 38:10)

தனக்குபின் நீண்ட சந்ததியை அல்லது குறைந்தது ஒரு ஆண் மகனையாவது விட்டுச் செல்ல வேண்டும். (தொநூ 15:17,18) ஏனெனில் இறந்தவர்கள் தங்கள் வாரிசுகளின் வழியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களின் நம்பிக்கை இறந்தபின்பு அடக்கச் சடங்குகள் அனைத்தும் முழுமையாய் நிறைவேற்றப் படவேண்டும். (2சாமு 1:11-27, எரே 16:1-9, எசே 24:15-17) அனாதைப் பிணமாகக் கிடப்பது கடவுளின் தண்டனையை உணர்த்தும் (2அர 9:16, ஏரே 8:1-3, எசா 14:19) நல்லடக்கம் செய்யப் பட்டோர் தங்களின் மூதாதையர் கூட்டத்தில் சேர்க்கப்படுவர் (தொநூ 49:33)

உயிர்ப்பு என்பதன் உண்மையான பொருள், கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு, அதிலும் குறிப்பாகக் கி.மு 2 ஆம் நூற்றாண்டில்தான் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. "இறந்த் உம் மக்கள் உயிர் பெறுவர்..." (எசா 26:19)

கி.பி. 5ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட இந்த வார்த்தைகளில்தான் கடவுளுடையபெயருக்காகவும், அவர்தம் மக்களின் மாட்சிமைக்காகவும் வேதனையுற்று இறப்போர் உயிர்ப்பர் என்ற நம்பிக்கை ஓரளவுக்கு வெளிப்படுத்தப் படுகிறது.

"...சிலர் முடிவில்லா வாழ்வு பெறுவர். வேறு சிலரோ வெட்கத்திற்கும் முடிவில்லா இழிவுக்கும் உள்ளாவர்" (தானி 12:1-3)

கி.மு. 167 இல். எம்மிலியானூஸ் ஆண்டியோகஸ் அரசனின் கொடுங்கோல் ஆட்சியினால் அவதியுற்று இறந்தோர் நித்திய வாழ்வுக்கும், அவனுக்குத் துணைபுரிந்தோர் நித்திய தண்டனைக்கும் உரித்தாவார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்பதற்கு இவ்விவிலியப் பகுதிசான்றாய் அமைகிறது.

கி.மு. 124இல் எழுதப்பெற்ற மக்கபேயர் இரண்டாம் புத்தகத்தில் குறிப்பாக தன் ஏழு குழந்தைகளின் உயிரையும் தியாகம் செய்யும் தாய் மற்றும் அவள் குழந்தைகளின் வார்த்தைகளிலே உயிர்ப்பின் நம்பிக்கை அழுத்தம் திருத்தமாய் வெளிப்படுகிறது.

இரண்டாம் மகன் இறப்பதற்கு முன் சொல்லுகிறான். "நாங்கள் இறந்தபின் என்றென்றும் வாழுமாறு அனைத்துலக அரசர் எங்களை உயிர்த்தெழச் செய்வார்" (2 மக்கபே 7:9)

மூன்றாவது மகன் "அவரிட மிருந்து மீண்டும் இவற்றைப் பெற்றுக்கொள்வேன்" (7.11)

நான்காவது மகன் "கடவுள் என்னை மீண்டும் உயிர்த்தெழச் செய்வார். ஆனால் நீ வாழ்வு பெற உயிர்த்தெழ மாட்டாய்" என்று அர சனைப் பார்த்து கூறுகிறான். (7:14)

உயிர்த்தெழுதல் கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடித்து நல்லவர்களாய் வாழ்ந்தவர்களுக்கு மட் டுமே உரியது என்ற இவர்களது நம்பிக்கை இங்கே தெள்ளத்தெளிவா கிறது.

தாய் தனது இறுதி மகனிடம் "உன் சகோதரர்களோடு உன்னையும் நான் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படி இப்போது சாவை ஏற்றுக்கொள்" என்று சொல்லி ஊக்க மூட்டினாள் (7:29) உயிர்ப்பு உண்டு என்ற நம்பிக்கையினால்தான் இவர்கள் சாவை ஏற்கத் துணிந்தி ருக்கிறார்கள்.

தொடக்க காலத்தில் நீடிய ஆயுளை மட்டுமே விரும்பியவர்கள் பிறகு படிப்படியாக இறந்த பிறகு கிடைக்கும் நித்திய வாழ்வை நம்பியிருக்கிறார்கள். காரணம்

1. நல்லவர் மற்றும் நீதிமான்கள் இறப்புக்குப்பின் பெறும் சிறப்பு.
2. அவர்கள் பட்ட வேதனைக்கு விடிவு உண்டு என்ற நம்பிக்கை
3. கடவுளின் கட்டளையைக் கடைப்பிடிப்போரை அவர் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கை
4. கடவுளின் வெளிப்பாடு ஒவ்வொரு காலக் கட்டத்திற்கும் தகுந்தவாறு படிப்படியாக நிகழ்ந்திருக்கிறது.

"காணாமலே நம்புவோர் பேறு பெற்றோர்" (யோவா 20:22) என்ற இயேசுவின் வார்த்தை பழைய ஏற் பாட்டு மக்களுக்கு முழுமையாய்ப் பொருந்துகிறது. அவர்களது முன் மாதிரியைப் பின்பற்றி உயிர்ப்பிலே முழுமையாய் நம்பிக்கை கொள்வோம். நித்தியவாழ்வை நிறைவாய்ப் பெற்றுக்கொள்வோம்.

சகோ. செல்வா,
அசிசி இல்லம், குருக்கள் மடம்.

# ஞாயிறு தினம் ஏன்?

வாரத்தின் முதல் நாளில் இயேசு உயிர்த்தெழுந்ததை ஞாபகப் படுத்துவதற்கும், உயிர்ப்பின் பிறகு இயேசுவின் பல காட்சிகள் வாரத்தின் முதல்நாளில் நடைபெற்றதை ஞாபகப்படுத்தவும், எம் வாழ்வில் நிகழ்வும், அப்பம் பிட்கும் நிகழ்வும் வாரத்தின் முதல் நாளிலேதான் நிகழ்ந்துள்ளதை ஞாபகப்படுத்துவதற்கும், இயேசு சீடர்களுடன் அப்பம் பிட்டு, அவர்களுடன் உண்டதும் உயிர்த்தபிறகு வந்த வாரத்தின் முதல் நாளிலேதான் என்பதை ஞாபகப்படுத்தவும், திருத்தூதர்கள் மேல் தூய ஆவியானவர் அனுப்பப்பட்டதும், சென்று போதிக்க அவர்கள் அனுப்பப்பட்டதும் வாரத்தின் முதல் நாளிலேதான்.

தோமாவுக்குக்காட்சி கொடுத்து, சமாதானக்கொடியை வழங்கியதும் வாரத்தின் முதல் நாளிலேதான் என்பதை ஞாபகப் படுத்தவும், அப்போஸ்தலிக்க பாரம்பரியத்தில் வாரத்தின் முதல்நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதையும் ஞாபகப்படுத்தவும், கி.பி 107ம் ஆண்டில் புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார், கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாளை அநுசரிப்பது சாலச் சிறந்தது என்பதைக் கூறியுள்ளார், உரோமை ஆளுநர் கி.பி 112ம் ஆண்டிலே, கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளிலே ஒன்றுகூடிச் செபித்து, கிறிஸ்துவுக்குப்பாடல் பாடினார்கள் என்று கூறியதை ஞாபகப்படுத்த கி.பி 321ம் ஆண்டில் ஏற்பட்ட மிலான் சாசனத்தில் கிறிஸ்தவர்கள் ஓய்வுநாளை அநுசரித்து, வேலைசெய்யாது ஓய்வு ஆண்டில் ஏற்பட்ட நிசேயா சங்கத்திலே, கிறிஸ்தவர்கள் ஞாயிறுதினத்தில் ஒன்றுகுடி, இறை வார்த்தையை எடுத்துரைத்து, அப்பம் பிட்குதல் நிகழ்த்தப்படல் வேண்டுமென்பதை ஞாபகப்படுத்தினர்.

ஞாயிறு தினம் சிறப்பாக, வழிபாடாகக் கொண்டாடப்பட்டு, அது ஓர்கடன் திருநாளாகவும் கொண்டாடப்படுகின்றது. இதில் கத்தோலிக்க திருச்சபையிலே ஞாயிறு திருப்பலிக் கொண்டாடப்படுதல் முக்கிய செயலாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அருட்சகோ.ஞா.
மரியநாதன்.(பு.பி.ம.ச)

## அகில இலங்கை ரீதியாக நடாத்தப்படும்
## சிறுகதை, கவிதை போட்டி

தலைப்பு : இலங்கை அப்போஸ்தலரான ஜோசவ் வாஸ் அடிகளார்.

விதிகள் :
1. ஒரு நபர் எத்தனை படைப்புக்களும் சமர்ப்பிக்கலாம்.
2. எவரும் பங்குபற்றலாம். அனைத்தும் சுயபடைப்பாக இருத்தல் வேண்டும்.
3. கவிதை அமைப்பு, நாலடி அல்லது ஆறடிக்கு மேற்படாமல் பிரித்து இருத்தல் வேண்டும்.
4. அனைத்து படைப்புக்களையும் 2006ம் ஆண்டு வைகாசி மாதம் 26ந் திகதிக்கு முன் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Rev. Fr. Benet shantha Fernando
st. Mary's Church
Old Anuradhapura Road
Puttalam
Tel: 032-2265390/ 0779201656

**சிறுகதைப் போட்டிக்கான பரிசுத்தொகை:**

1ம் இடம் ரூபா 2000/
2ம் இடம் ரூபா 1500/
3ம் இடம் ரூபா 1000/

**கவிதை இயற்றல் போட்டிக்கான பரிசுத்தொகை:**

1ம் இடம் ரூபா 1000/
2ம் இடம் ரூபா 750/
3ம் இடம் ரூபா 500/

உயிர்ப்புக்கு உங்கள் செயல்களே சாட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் அழைப்பு

மீண்டும் இறை அன்பினதும், இரக்கத்தின தும் காலமாகிய "தவக்காலத்தை" நாம் அனைவரும் சந்திக்கின்றோம். இக்காலம், தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் எமக்குத் தரப்படும். ஒரே அழைப்பு "மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" ஆனால், எமது வாழ்வு, செயல்கள், எண்ணங்கள், கொள்கைகள், கண்டுபிடிப்புகள், சாதனைகள், மாற்றமடைந்திருக்கின்றன என்பதுதான் உண்மை.

தவக்காலம் இறையருளின் காலம். மீட்பின் இக்காலத்தில் இறைவனின் உயர்ந்த அன்பையும், பராமரிப்பையும், பல மாற்றங்கள் மத்தியிலும் கண்டு கொள்ளவும், இறையரசின் மதிப்பீடுகளை பின்பற்றாமல், வாழ்ந்த நிலைகளுக்காக மன்னிப்புப் பெற்று, தூயோராய் வாழவும், நாம் அழைக்கப்படுகின்றோம்.

பாவத்தின் செயல்களையும், வெளிப்பாடு களையும், பல்வேறு வடிவங்களில் பார்க்கின்றோம். கேட்கின்றோம். ஆனால், இன்று மனிதன் மட்டில் பாவ உணர்வு வளர்ந்து கொண்டு செல்வதே அனைத்து தீமைகளுக்கும் காரணம். இதயக்கடினத்தாலும், அகங்காரத்தாலும், இறையுணர்வையும் மனிதர் இழந்து விடுவதும், இறைவனின் குரலுக்கு செவிமடுக்காமல், தான்தோன்றித்தனமாக வாழ்க்கை நடாத் துவதும், மகிழ்ச்சியை, சமாதானத்தை, ஒப்புரவைத் தடைசெய்யக்கூடியவை, என்பதை இக் காலத்தில் நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

"உங்கள் உடைகளையல்ல. இதயங் களையே கிழியுங்கள்" என்பது நிலையான புது வாழ்வுக்கான இறை வார்த்தையின் அவசர அழைப்பு. இப்புதிய வாழ்வை நாம் கண்டுகொள்ள எவ்வளவோ சந்தர்ப்பங்களை திருச் சபை இறைமக்களாகிய நமக்குத் தருகின்றது. திருப்பலியில் பங்கெடுக்க முடியுமான சூழலில் பங்கெடுத்தல், ஒப்புரவு அருட்சாதனத்தில் ஆர்வத்தோடு பங்குபெறுதல், பாடுகளின் வரா லாற்றை தியானித்தல், தனியாகவோ, குடும்ப மாகவோ, குழுவாகவோ சிலுவைப்பாதை செய்தல், அடிக்கடி நற்கருணை சந்தித்தல், பிறர் அன்புப் பணிகளில் ஈடுபடல், பயனற்ற பொழுது போக்குகளை விட்டுவிடுதல், ஒப்புரவற்றவர் களோடு ஒப்புரவாகுதல், நோயாளிகளைப் பார்வையிடுதல், தவ முயற்சிகள் வழியாக பகிர்தல், இறை வார்த்தையை நாள்தோறும் வாசித்தல், இக்காலத்தில் நாம் செய்யக்கூடிய விசுவாச செயல்களில் முக்கியமானவை.

எல்லாவற்றிற்கும் மனமாற்றமே அவசர தேவை. இன்று எத்தனையோ குடும்பங்களில் கணவன், மனைவி உறவு நிலைகளில் அன்பு செய்யாத நிலைகளுக்காக மனம் வருந்தி, அன்பு செய்ய முடிவெடுக்கும் காலம். பிள்ளைகள் தங்கள் தாய், தந்தையை மதிக்காத நிலை களிலும், பொறுப்பற்ற வாழ்வின் நிலைகளிலிருந்தும். "தாய், தந்தையைப் போற்று, உன் இளமையில் உன்னை படைத்தவரை மற வாதே" என்ற வார்த்தைக்கு, நொருங்குண்ட உள்ளத்தோடு திரும்பும் காலம், இறைமக்கள் சமூகம் நீதியை நிலைநாட்ட, சமாதானம் செய்ய திரும்பும் காலம்.

இவ்வாறாக பல மாற்றங்களில் சிக்குண்டு துன்புறும் நிலைகளிலிருந்து இறையருளையும், இரகத்தையும் பெற்று, புது வாழ்வு வாழ, தவறுகளுக்காய் உண்மையாய் மனம் நொந்து, மன மாற்றமும், புதுவாழ்வும் தேவை என்பதை இக்காலத்தில் உணருவோம்.

**இறையாசீருடன்,**

**என்றும் உங்கள் உறவில் - அருட்திரு.அ.அமலதாஸ், அமதி**

**நன்றி: உறவுகள்- பிரான்ஸ் ஆன்மீக பத்திரிகை.**


**நண்பர்களுக்கும் உபகாரிமார்களுக்குமான "பாதை"**

Editor,
PATHAI,
franciscan Brothers, Assesi Nivasa,
Thudarikulam Road,
Cheddikulam,
sri Lanka.

Editor,
PATHAI,
franciscan Brothers, Canal Road,
Wattakaliya,
Chilaw,
sri Lanka.
Tel : 032 - 2223635

E.mail : pathaicmsf@yahoo.com

தனிப் பிரதி : 5 ரூபா வெளிநாடு யூரோ U$ 5 ஆண்டு சந்தா : 60 ரூபா

உங்கள் அன்பளிப்புகள், உதவிகள் பாதை பத்திரிகை வளர்ச்சிக்கு பயன்படுத்த உதவவும்.

**10.05.2006 இற்கு முன் உங்கள் ஆக்கங்களை அனுப்பி வைக்கவும்.**


# புனித பிரான்சீஸ் அசிசியாரின் பாதையில் அருட்சகோதரர் பவுல் மொறிஸ் அவர்களின் தூர தரிசனம்

பன்னிரெண்டாம் நூற்றாண்டு திருச்சபையானது வலுவிழந்து, ஒளியிழந்து மங்கிக்கொண்டிருந்தது. கிழக்கு வானின் விடிவெள்ளியாய், திருச்சபையின் மறுமலர்ச்சியின் மகுடமாய் அவதரித்தார் அண்ணல் பிரான்சிஸ் அசிசி. பிறப்பினிலே செல்வந்தனாய், வாழ்வினிலே ஏழ்மையாய், அமைதியின் தூதனாய் துடிப்புடன் வாழ்ந்து இயேசுவின் சாயலை தன்னகத்தே கொண்டு விவிலியத்தை வாழ்வாக்கி வையகம் முழுவதும் வாழ்வதற்கு வழிகாட்டிய அண்ணல் அசிசியை பின்பற்றும் துறவறசபைகள் பாரினில் எத்தனை எத்தனையோ!

ஆம்! இதைப்போன்று எமது பிரான்சிஸ்கன் மறைபரப்பு சகோதரர்களின் சபையை ஸ்தாபித்த அருட்சகோதரர் பவுல் மொறிண்ணாஸ் அவர்கள் பிறப்பினிலே யூதராய் பிறந்து யூத கலாச்சாரத்தின்படி வாழ்ந்திருந்தாலும் கிறிஸ் துவின் மீதும், அவரது நற்செய்தியிலும் ஆர்வம் கொண்டு கிறிஸ்தவ மதத்தை தழுவினார். அனைவரின் நன்மதிப் பையும் பெற்றிருந்தார். சகோதரர் செல்வச் சிறப்பிலும் சுக போகத்திலும் வாழ்ந்தாலும் ஏழைகள் மீது அன்பும் இரக்கமும் கொண்டவர். ஒருவன் உலகமெல்லாம் தனதாக் கிக்கொண்டாலும் பயனில்லை இயேசுவை ஆதாயமாக்கிக் கொண்டால்தான் வாழ்வு என்றுணர்ந்த அண்ணல் அசிசியை போன்று அனைத்தையும் துறந்து தன்னை முழுவதும் இயேசுவுக்காய் அர்ப்பணித்தார்.

இவ்வாறு இவரது தியாகப் பாதையில் பல தடைக்கற்களை மயிற்கற்களாக கடந்து வந்திருந்தாலும் நிறைவு காணாத சகோதரர் இறைவன் தன்னை ஏதோ ஒன்றை மேலதிகமாக செய்ய அழைக்கின்றார் என்றுணர்ந்தார். எனவே தனது பணியை நிறைவாய் செய்ய ஏற்ற இடமாக இந்தியாவைத் தேர்ந்தெடுத்தார். அதன்படி 1901ம் ஆண்டு பிரான்சிஸ்கன் மறைபரப்பு சகோதரர்களின் சபையை திருச்சபையின் அங்கீகாரத்தோடு தற்போதைய பாக்கிஸ்தானில் உள்ள லாகூரில் ஏராளமானோர் இவரோடு இணைந்து கொண்டார்கள். ஆகவே பிரான்சிஸ்கன் மறைபரப்பு சபை ஒரு விருட்ஷமாக வளர ஆரம்பித்தது.

ஆரம்பத்தில் குருக்கள், கன்னியர்கள் யாருமே போகமுடியாத குக்கிராமங்கள் மற்றும் சமூகத்தினால், சாதியினால், கலாச்சாரத்தினால் ஒதுக்கப்பட்டு, கிறிஸ் துவை அறியாது வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் மத்தியில் வேத, போதக பணிகளை சகோரர்கள் செய்து வந்தார்கள். இவ்வாறு கடந்த 105 ஆண்டுகளில் சகோதரர்களின் அளப்பெரிய பணியினால் இந்திய மண்ணில் உருவான மறைமாவட்டங்கள் நான்கு. அத்தோடு பல பங்குகளும், சிறிய கிறிஸ்தவ குழுமங்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இதைப்போன்று தங்கள் பணியின் தூரதரிசனத்தைக் கொண்டு சகோதரர்கள் தங்கள் பணிகளையும், பணித்தளங்களையும் விரிவுபடுத்தினார்கள்.

அதன்படி இன்று இந்தியா, இலங்கை, அமெரிக்கா, கனடா, ஜேர்மன், இத்தாலி, சுவிட்ஸ்லாந்து மற்றும் தென்அமெரிக்கா போன்ற நாடுகளில் பல இறைப்பணிகளை செய்து வருகின்றனர். இந்தியாவில் மட்டும் 19 மாநிலங்களில் 75 பணித்தளங்களில் காலத்தின் தேவைகளையும், கட்டாயத்தையும் அறிந்து தூரநோக்கோடு கல்விப்பணி, சமூகப்பணி, மருத்துவப்பணி, சிறுவர் இல்லப்பராமரிப்புப் பணி, முதியோர் இல்லபராமரிப்புப் பணி, முறைசாரா கல்வி நிறுவனங்கள், தொழிற்பயிற்சி மையங்கள் போன்ற அநேக பணிகளை செய்து வருகின்றார்கள். இவ் வாறு கடந்த பதிமூன்றாவது சபையின் பொது அமர்வில் எடுத்த தீர்மானத்தின்படி பல மாகாணங்களில் சேவை 23 சகோதரர்கள் ஒன்றுசேர்ந்து தனி பிராந்தியமாக உருப்பெற்று, தமிழ்நாட்டில் திருச்சியை தலைமையிடமாகக் கொண்டு, திருச்சிராப் பள்ளி, நாகர் கோவில், பாகோடு, திண்டிவனம், சரக்கல்விளை, தோமையார் புரம், சந்தைமேடு போன்ற ஏழு பணித்தலங்களில் பணி செய்து வருகின்றார்கள்.

இந்த பிராந்தியத்தின் வளர்ச்சியில் பிராந்திய தலைவர் அருட்சகோ. விக்டர் ஜெனரல் மற்றும் அருட் சகோ. பிரகாஷ் அவர்களின் விடாமுயற்சியினாலும், கடும் உழைப்பாலும் உருவான கேர் & சேர் தொண்டு நிறுவனத்தின் வழியாக திருச்சி மாவட்டத்திலும் அதன் அண்மையிலுள்ள பிரதேசங்களிலும் மிகவும் பின்தங்கிய கிராமப்புற மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்காக பல பணிகளை செய்து வருகிறார்கள். குறிப்பாக காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல், கிராம சுற்றுச்சூழல் பாதுகாப்பு மேம்பாடு, மகளிர் மழலையர் சுகாதார வாழ்வு மேம்பாட்டு பணிகள் ஆண்–பெண் சுயஉதவிக்குழுக்கள், இலவச மேலதிக வகுப்பு மையம் போன்ற பல சமூக நலப் பணிகளை செய்து வருகின்றார்கள். இக் குறுகிய காலத்தில் சகோதரர்களின் சேவையானது சாதி, சமய, இனம், மொழி வேறுபாடின்றி அனைத்து மக்களுக்கும் சென்றடைகின்றது என்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

புனிதபிரான்சீஸ் அசீசியாரின் பாதையில் உங்கள் தூரதரிசனப் பணிகளை பகிர்ந்து விழுதுகளின் விருட்சத்தை உலகறிய பதிவாக்குவோம்.


சகோ.யேசுதாசன் C.M.S.F
திருச்சிராப்பள்ளி,
தமிழ்நாடு, இந்தியா


எமது இலங்கை சகோதரர் யேசுதாசன் அவர்கள் இந்தியாவில் உயர்கல்விகற்று பணிசெய்துவருவதுடன் "பாதை" வளர்ச்சியின் முன்னோடியாகவும் இந்திய நிருபராகவும் பணியாற்றுகிறார்.

## கல்வியின் முக்கியம்

கல்வி என்பது கசப்பு அதைக்
கற்று முடித்தால் சிறப்பு
வண்டு நாடுவது பூந்தோட்டம் - நான்
நாடுவது கல்வித் தோட்டம்
காதல் எனும் 3 எழுத்தை விட்டுவிட்டு
கல்வி எனும் 3 எழுத்தை தொடர்க!
வானில் இடி ஓசை
கோயிலில் மணி ஓசை
கடலில் அலை ஓசை - என்
மனதில் கல்வி ஓசை.

க. புவனேந்திரன்
சிலாபம்



ஜெ.எம்.ஜொனிற்றா,
மட்டக்களப்பு

## சமாதானத்தை நோக்கி

யுத்தமேகம் சூழ்ந்த
எம் தேசமதில்
சில ஆண்டுகளாக சிறியதொரு விடியல்
மக்கள் மனதில் ஓரளவு அமைதி
ஆனால் திடீரென ஒரு புயலாய்
எம்மவர் மனதில் பழைய நிலை
போர் தொடருமோ எனும் ஏக்கம்
அது நம் தேசத்தை சிதறடிக்குமோ
எனும் துக்கம்
ஆயுதத்தால் எம் தேசம் விடியாது
மாறாக ஒரு இனம் மற்ற இனத்தினது
புரிந்துணர்வாலேயே விடியும் எம் தேசம்
வீசுவோம் அறியாமை எனும் ஆயுதத்தை
ஏந்துவோம் சமாதான தீபத்தை
வீறுநடை போடுவோம்
ஒரு தேசத்தின் மாந்தராய்

பு. பற்றிக்டயஸ், சிலாபம்

## பாதையின் சிறப்பு

பார்த்துப் பழகிய பாதையில்
பல வருடம் கடந்தும்
அதை வாசித்து சளைக்கவில்லை
நான்! காத்திருக்கின்றேன்
புதிய ஒரு பாதைக்கு
பண்புகள் பல நிறைந்த
பாதையை
பாசத்துடன் கடந்து வந்தேன்
இன்று என் பாதை
என்னவென்று
அறிந்து கொண்டேன்......
வாழ்க்கைக்கு வழிகாட்ட
பாதை
உன் ஆலோசனை தேவை
என்னைப் போன்ற இன்னும்
சில
மாணவர்களின் பாதையை
ஒளிமயமாக்க!

வ.ரொசான்
பிரான்சிஸ்கன் நவசன்னியாச
இல்லம், சிலாபம்.

# திருச்சபையின் மூலைக்கல் யார்?

அருட்சகோ ஞா.மரியநாதன்
(பு.பி.ம.ச)

"எனவே நான் உனக்குக் கூறுகின்றேன். உன்பெயர் பேதுரு, இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்" என்று இயேசு முதல் போப்பாண்டவரான பேதுருவுக்குத் தான் சொன்னார். நமது ஆண்டவரும், மறை உடலின் தலையுமானவர், பேதுரு என்னும் பாறையின் மேல் ஆரம்பித்த திருச்சபைதான் கத்தோலிக்க திருச்சபை' மத் 16:18


கத்தோலிக்க திருச்சபை என்றால் அனைவருக்குமான திருச்சபை என்று பெயர். இயேசு அனை வருக்காகவும், அனைவரின் மீட்பிற்காகவும் வந்தவர். இயேசு தமது உடலாலும் இரத்தத்தாலும், தம்முடைய பாடுகளால், சிந்திய இரத்தத்தினாலும் விலை கொடுத்து மீட்டுள்ள சபையே, திருச்சபை. "இது என் இரத்தம், இது உங்களுக்காகவும் பலருக்காகவும் சிந்தப்படும் என் உடன்படிக்கையின் இரத்தம்" மாற் 14:24 திருச்சபையாகிய உடலுக்குத் தலையும் தொடக்கமும் அவரே. கொலோ 1:18

ஆகவே பலர் இயேசுவின் நாமத்தைச் சொல்லி வருவார்கள். தங்கள் தலையைத்தான் பெரிதாக்குவார்கள். உண்மையானதென்று சொல்வார்கள். அவைகள் இடை நடுவில் 16ம் நூற்றாண்டுக்காலத்தில் மாட்டீன் லூத்தருடன் தொடங்கி, இப்போதும் 3ம் மிலேனியத்திலும் புதுப்புதுச்சபைகள் வேதாகமத்தைப் பிழையாக அர்த்தம் கொண்டு போதிப்பார்கள். இதோ பல அந்திக்கிறிஸ்துக்கள் நம் காலத்தில் தோன்றிவிட்டார்கள். நிலைபெயராது உறுதியாய் இருங்கள். "இதோ மெசியா இங்கே இருக்கிறார் அதோ அங்கே இருக்கிறார் எனச் சொன்னால் நீங்கள் நம்பவேண்டாம்" மத். 24:23 இதை ஒரு தொழிலாகவும் வருவாயாகவும் தம்மை வெளிப்படுத்த முனைவார்கள் நம்பவேண்டாம்.

## புனித பிரான்சிஸ் அசீசி

உண்மை என்னவென்று
நீ அறிந்திட வேண்டுமா?
உன் பாதையை நீ
பார்த்திட வேண்டுமா?
ஏழ்மை என்னவென்று
அறிந்திட வேண்டுமா?
ஏழையின் உள்ளத்தை
புரிந்திட வேண்டுமா?
எத்தனித்துப்பார்
அச்சியின் பாதையில்

எம்.ஐ-வியஸ்
சிலாபம்



றேமன் பமிலா
மகளிர் கல்லூரி,
சுண்டுக்குளி.


யாழ்.குருநகர் மகாஞான ஒடுக்கம் நிறைவு நினைவாக புனித சிலுவை கெபியில் நிறுவப்பெறும் வழிபாட்டில் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையுடன் பங்குத்தந்தை சகாயநாயகம் அடிகளார் சிலுவைப் பவனியில் எடுத்துவர அமதி குருக்களுடன் மக்களும் பிரார்த்தனையில் ஈடுபடும் காட்சி

## உதயம்

காலையில் சூரிய உதயம்
மாலையில் சந்திர உதயம்
தாயின் வயிற்றில் மனித உதயம்
எமனின் கையில் மரண உதயம்
என் கையில் வாழ்வுதயம்.

V.பிரசாதன், மாத்தளை

**நண்பர்களோடு மட்டுமல்ல பகைவர்களுடன் சமாதானத்தைப் பகிருங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களால் முடியுமா?

"எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள்
மன்னிப்பதுபோல எம் பாவங்களையும் மன்னித்தருளும்"

மன்னிப்பு என்ற பண்பு மக்களின் மனதைவிட்டு அகன்று போனதால் நாடுகளும், இனாங் களும் பிரிவினை வாதங்களை இன்று எதிர்நோக்கியுள்ளன. மன்னிப்பளித்தலின் உச்சக்கட்டம் இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது தன்னைத் துன்புறுத்திக் கொண்டிருந்த போர்ச் சேவகருக்கு மன்னிப்பை பெற்றுக்கொடுத்த வேளையாகும். எல்லைகளைத் தாண்டிச் செல்லும் அன்பு எல்லா கிறிஸ்தவ மத்தியிலும் கட்டாயமாக நிலைகொள்ள வேண்டும்.

மன்னிக்கும் மனப்பாங்கை நாம் அனைவரும் வளர்க்க வேண்டும். இந்த வளர்ச்சியின் செயலை நாம் எவ்வாறு தொடர்ந்து மேற்கொள்வது? சினமுற்றாலும் பாவம் செய்யாதிருங்கள். பொழுது சாய்வதற்குள் உங்கள் சினம் தணியட்டும். இவ்வாறான நற்குணங்கள் கிறிஸ்தவர்கள் மனதில் வளரும்போது அவர்களுக்குள் மன்னிப்பு எனும் கிறிஸ்தவ மதிப்பீடும் துளிர்விட்டு வளரும்.

நாம் பிறரிடம் மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்கோ எதிர் பார்ப்பதற்கோ அதிகமாக நாம் பிறருக்கு மன்னிப்பு வழங்க ஆயத்தமாயிருக்க வேண்டும். மற்றவர்கள் மீது பொறாமையோ, சுயநலமோ எங்கள் உள்ளங்களில் நிலைகொள்ளச் செய்யக்கூடாது.

மன்னிப்பை பெற்றுக்கொடுக்க விரும்புபவர்கள் பிறரோடு அன்பு, இரக்கம் நிறைந்தவர்களாய் இருக்க வேண்டும். உங்களுக்கு தீமை செய்யும் மக்கள் மீது பழிவாங்காது அவர்கள் மேல் அன்பு செலுத்தி சமாதானம் செய்து அவர்களுக்காக மன்றாடுமாறு இயேசு பணித்துள்ளார். இவ்வாறாக ஒரு கிறிஸ்தவன் சிறப்பான முறையில் மன்னிப்பளிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும்.

இயேசு கூறிய உவமையை நாம் நோக்கும்போது இரு கடன்காரர் உவமையில் ஒருவன் பிறரை மன்னிக்காவிட்டால் அவனுக்கு கடவுளின் மன்னிப்பு கிட்டாது என்பதாகும். இறை இயேசு எமக்கு கற்பித்துள்ள குடும்ப செபத்தில் "எங்களுக்கு தீமை செய்தவர்களை நாங்கள் மன்னிப்பதுபோல எம் பாவங்களையும் மன்னித்தருளும்" என்று காண்கிறோம். மன்னிப்பு என்னும் கிறிஸ்தவ பெறுமதியை எமதுள்ளங்களில் வளர்த்துக் கொள்வதற்கு முதலில் நாம் மன்னிப்பு வழங்கும் சிந்தனையைக் கொள்வதற்கு முதலில் நாம் மன்னிப்பு வழங்கும் சிந்தனையைக் கொண்டிருத்தல் அவசியம். பிற மக்கள் பற்றி பொறுமையாக இரக்கத்தோடு சிந்தித்து செயல்படுவோமெனில் மன்னிப்பளிக்கும் சிந்தனை எமக்குள் இயல்பாகவே வளரத் தொடங்கும்.

A.D.J. ஜொனி
நிசாந்தன்,
சிலாபம்.

## திருவிவிலியம்

திருப்தி தரும் திரு விவிலியம்
உன் வாழ்க்கையை
ஒளிமயமாக்கும் திருவிவிலியம்

உளாவுகின்ற உன் மனதை
ஒருங்கிணைக்கும் திருவிவிலியம்

தேடுகின்ற அன்பை
தேடிவந்து தந்திடும்
தேர்ந்தெடுக்கப் பட்டவனாய்
இருந்தால்
தெரிவு செய்யும் திருவிவிலியம்

வாசித்து உன் வாழ்க்கையை
நீ அழகுபடுத்த திருவிவிலியம்
தூண்டும்.

ஆர். ராஜ்குமார்
நவசன்னியாசி இல்லம்
சிலாபம்.

# தவக்காலம்



கல்வாரி மலை ஏறும் வழிபாட்டுக் காலம் இது. இயேசுவின் மரணப்பாடுகளையும், இறப்பையும் உயிர்ப்பையும் திருச்சபை மீண்டும் மீண்டும் தியானிக்கும் காலமிது. சிலுவை சித்திரவதைத் தண்டனை நீக்கியபோதும், சித்திரவதைகள் தொடருகின்றன. இன்று சிலுவை எமது மரணப்பாடுகளினதும் நம்பிக்கையினதும் சின்னமாகும்.

இயேசு விதைப்பவன் உவமையில் நற்செய்தியை விதைக்கு ஒப்பிட்டு படிப்பித்தவர். யோவான் தமது நற்செய்தியை ஆரம்பித்த போது வார்த்தை மனிதனானார் என இயேசுவை அறிவித்தவர். இயேசுதான் அந்த நற்செய்தி. கோதுமை மணி முழுமையாகப் பயன் தரு வதற்கு தன்னை உடைக்க கல்வாரிப் பயணத்தின் இறுதிக் கட்டத்தின் இடம்தான் பெத்தானியா. இயேசுவின் இறுதிப் பயணத்தின் இறுதிக் கட்டம் எருசலேம் நோக்கி பலியோடு போகிறது. பெத்தா னியா வெறும் இடம் மட்டுமல்ல. அவரது சிலுவைப் பயணத் தின் இறுதிக் கட்டம். இயேசுவின் மன உணர்வை ஆதங்கத்தை மனக்கிளர்ச்சியை நற்செய்தியாளர் பேசுகிறார். அவரும் புள்ளி விபரங்கள் தரவில்லை. மாட்சி பெறும் நேரம் வந்துவிட்டது. இயேசுவின் மனித உணர்வு ததும்புகிறது.

### வெறும் புள்ளி விபரமல்ல மனித உணர்வுகள்

ஐக்கிய அமெரிக்கா நடத்திய வியட்னாம் போரில் பொது மக்களின் இழப்பு ஏறக்குறைய 80 வீதமாக உயர்ந்தது. உலகெங்கும் தற்போது நடைபெறும் முரண்கையில் பொது மக்களின் இழப்பு 85 வீதத்திலிருந் 95 வீதமாக உயரலாம். உயிரிழப்புகளைவிட அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் 18 கோடி ஏதிலிகள் மேலதிகமாக உள்ளனர். இது 1970 இல் உள்ளதைவிட இத்தொகை ஆறு மடங்காகும். நமது நாட்டினுள் 24 கோடி மக்கள் இடம் பெயர்ந்து உள்ளனர். இவ் எண்ணிக்கை 1985ஐ விட இருமடங்காகும்.

சிறுவர்கள் பற்றிய தரவுகள் இவற்றைப் போல் அதிர்ச்சிதரக்கூடியவை. 1986 - 1996 க்கு இடையில் 2 கோடி சிறுவர்கள் இறந்ததாகக் கணிக்கப்பட்டுள்ளதுடன், இன்னும் 4 - 5 கோடியினர் காயப்பட்டும் அங்கவீனமாயும் உள்ளதோடு 12 கோடி மக்கள் இல்லிடமற்றவராயும் 1 கோடியினர் அநாதைகளாகவும் அல்லது பெற்றோரை பிரிந்தவர்களாகவும் உள்ளனர். புள்ளி விபரங்களை அள்ளி வீசலாம். மனித உணர்வுகளை வீச முடியாது.

### மன்னிப்பின்றேல் எதிர்காலமில்லை

இறைவாக்கினர் எரேமியாவின் வார்த்தையின் நிறைவை இயேசுவின் சிலுவை மரணத்தில் திருச்சபை காண்கிறது. நீதியின்றி உண்மையான அமைதி இல்லை என பல தருணங்களில் திருத்தந்தை யோவான் பவுல் கூறியுள்ளார். தீர்க்கமான முடிவான அமைதிக்கு முரண்கையில் பங்கு பற்றிய சமூகத்தில் இருப்புள்ள அநீதிகள் மேற்கோள் காட்டும் பணியை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். முரண்கை முடிவுக்கு நீதிப்பிரச்சினைகள் பழைய பிழைகளை இல்லாததாக்கல் போன்ற ஆதார காரணங்களை முரண்கை தீர்வாக்கம் ஆராய வேண்டும். ஒப்புரவில் உழைப்பது குணமாகுதலும், மன்னிப்பும் இடம்பெறக் கூடிய ஒரு தளத்தை உருவாக்குவதாகும்.

நாடுகள் வித்தியாசமான கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாது. பிரான்கோ ஆட்சியின் பின் ஸ்பெயின் எல்லோருக்கும் மன்னிப்பு வழங்கியது. இரண்டாம் உலகப் போரின் பின் ஐக்கிய அமெரிக்கா யேர்மனியில் நூரன்பேர்க் சட்ட நடவடிக்கையை வலியுறுத்தியது. சிலி, ஊருக்வே, ஆர்ஜன்ரீனா, எல்சல்வடோர் பாதிப்புகளுக்கு போரின்போதான வெளித் தளங்களுக்கு பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்க உண்மைக்கான ஆணைக் குழுவைத் தெரிவு செய்தது. 'தென் ஆபிரிக்கா' வன்முறை பழைமையில் இருந்து திரும்ப உண்மை ஒப்புரவுக்கான ஆணைக் குழுவை ஸ்தாபித்தது.

வழமையான போர் சட்டங்களைக் கருத்தில் கொள்ளாது பக்கச்சார்பு வன்முறையாலும், அரச ஒடுக்குமுறையா லும், இலக்கு வைக்கப்பட்ட குடிமக்களின் முரண்கைக் காயங்களை போருக்கு பிற்பட்ட காலங்களில் நாடு குணப்படுத்த முயலவேண்டும். புதிய அரசு முரண்கையின் போக்கில் கிரிமினல் வன்முறையைத் தொடர்ந்தவர்களை எப்படிக் கையாளப் போகின்றது என்பது எமது ஒப்புரவுப் பணியில் எதிர்வினையை உருவாக்கும். பல வேளைகளில் ஒப்புர வுக்கும் நீதி வழங்கல் போக்குக்குமிடையில் குறிப்பிட்ட இறுக்க நிலை வழமை யாக வெளிப்படும்.

### 'மன்னிப்போம் மறப்போம்'

அவரைச் சித்திரவதைக்கு உள்ளாக்கியவர்கள் எதிர்பார்த்தது போல் அக் காயங்கள் ஒருபோதும் இருக்கவில்லை. எமது பற்றுறுதி குறைபாட்டினை குணமாக்க இயேசுவின் காயங்கள் அடிப் படையாகிவிட்டன.

'மன்னிப்போம் மறப்போம்' என்ற சுலோகம் விவிலியத்தில் ஒரு இடத்திலும் இல்லை. மத்தியகால மேற்கத்தைய கிறிஸ்தவப் பின்னணியில் இது தோன்றியிருத்தல் வேண்டும். எம்மில் தொடர்ந்து இழைக்கப்பட்ட மிக மோசமான தீமைகளை நாம் ஒருபோதும் மறக்கமுடியாது என்பதுதான் உண்மையான நிலைப்பாடு. துயரத்தன்மையான தீமையை மறப்பது துயரத்தன்மையான மானிடத்தை மறப்பதாகும். எனவே மன்னிக்கின்றோம் மறப்பதில்லை. இன்னொரு வழியில் நினைக்கின்றோம் என்றே சொல்வது நல்லது. எமக்கு இழைக்கப்பட்டதை நினைக்கின்றோம் எனினும் எமது ஒப்புரவாக்கத்தின் ஒரு பகுதியாகிவிட்டதால் எமது மானிடத்தை ஒருபோதும் பாதிப்பதில்லை என்று சொல்லுகிறோம்.

### ஏன் போர் தொடர்கிறது?

மனித உரிமை இயக்கங்கள் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளால் இலகுவில் கடத்தப்பட்டு தமது அரசியல் குறுகிய ஆசைகளுக்கு பயன்படுத்தலாம் என்பதைப் பற்றியும் நாம் விழிப்பாகவேண்டும். அதனால்தான் பல இன முரணிகள் அழுந்திப்போவதைக் காணலாம். இது இலங்கைத் தீவின் கதைமட்டுமல்ல உலகின் பல போர்களுக்கும் அழிவுகளுக்கும் காரணமாக அமைந்துள்ள வரலாற்றை நாம் பார்க்கலாம். போர் இன்றும் தொடர்கிறது. மனித அழிவின் ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படுவதுடன் அதைப் பரீட் சிக்கும் களங்களாக மூன்றாம் உலகத்தில் மோதல்கள் தூண்டப்படுகின்றன. பேரழிவுதரும் ஆயுத உற்பத்தியும் பாவனையும் மக்களையே பெருமெடுப்பில் காவுகொள்ளுகின்றன. 75 வீதத்துக்கு மேற்பட்ட மானிடம் உலகக் கடனாலும், பட்டி னியாலும் மெதுவாகச் சாகடிக்கப்படுகிறது. பசி, வறுமை, அறியாமை, சுகாதாரமற்ற குடிநீர், இல்லிடமற்ற தன்மை, வேலையின்மையால் மானிடம் தன் முகத்தை இழக்கிறது.

### நீதியை விதைத்து அமைதியை அறுவ டையாக்குவோம்.

மன்னிப்பு பலமின்மையாக அடையாளம் காணும் பண்பாட்டுக் கருத்தைவிட மன்னிப்பு பெரியது ஆகும். நாம் மன்னிப்பது நாம் மன்னிக்கவேண்டும் என்பதற்காகவோ, அல்லது வேறு தெரிவு இல்லை என்றோ அல்ல, கடவுளின் அம்சத்திலிருந்து எமது உடைபட்ட நிலையிலும் உலகினைப் பார்க்க வந்துள்ளோம் என்பதனால்தான் மன்னிக்கின்றோம்.

ஒப்புரவு கடவுளிமிருந்தே வரும். இது எமக்கு ஆழமானதும் கடினமானதும் என்பதை இது உணர்த்துகிறது. மன்னிப்பது என்பது கடவுளின் அருள் வளமையையும் நிறைவையும் பகிர்தலாகும் உண்மையாகவே எமது மானிடத்தை மீளமைக்கிறது. கடவுளே அந்த அன்பு.

அருட்பணி [illegible]

# இது இப்படி

இந்த வெள்ளை மலருக்கு மணம் கொடுத்தது யார்? வானவில்லுக்கு வண்ணம் பூசியது யார்? மொட்டை வானத்துக்கு நட்சத்திர முத்துமாலை அணிவித்தது யார்? ஆண்டவரே இந் தப் பச்சைப் புல் வெளிக்கு பசுமையை பூசியது யார்? இந்த மகாநீர்த்திரலை யைக் கலக்கிவிட்டது யார்?, காலை யில் உதித்து மாலையில் அந்த மாதவனுக்கு சொல்லி கொடுத்தது யார்? நான் சுவாசிக்க மூச்சு விட்டது யார்? நான் வாழ இன்னுயிர் நீத்தது யார்? யார்? யார்?

ஓ என் தேவனே! நீரல்லவா இவற்றையெல்லாம் செய்தீர். எனக்கு இவற்றைத் தந்தீர். ஞாபகமறதியால் உருவாக்கப்பட்ட எனக்கு எங்கு இதெல்லாம் தினம் மனசுக்கு வரும்? இதைவிட நினைவுபடுத்த எத்தனை விடையங்களை நான் நினைக்க வேண்டியிருக்கு. எனது குடும்பம், எனது கணவன், மனைவி, பிள்ளைகள், எனது தொழில், எனது உற்றார் உறவினர், எனக்கு பிடித்தமான நன்பர்கள், எனக்கு பிடித்த இடம், உணவு, உடை அப்பப்பா என்னைப் பற்றி சிந்திக்க எத்தனையோ இருக்கு. எனக்கு எங்கு நேரம் இருக்கு உலகை ரசிக்க? உயிர் கொடுத்தவனை நினைக்க தவிர்க்க முடியாத ஒன்றாக இருப்பதால் சிலவேளை நினைப்ப துண்டு. ஆலயம் செல்ல அதுவும் மற்றவர்களின் நுளம்புத் தொல்லை தாங்க முடியாததனால் அத்தோடு சிறுவர் முதல் என் சிந்தனையில் போட்டிருக்கும் பாவம் எனும் பதம் உச்சரித்துக் கொண்டிருக்கின் றேன். ஊரறியவும் கூறிக்கொண்டிருக்கின்றேன்.

வாழ்பவனாக தெரியவில்லை தெரிந்தாலும் தெரியாததுபோல ...கிறேன் ஒவ்வொரு காலமும் எனக்காகவே, என் வாழ்க்கைக்காகவே என்பதை மறந்து காற்றில் சுற்றும் காற்றாடியாய் சுற்றிக் கொண்டிருக்கிறேன். உலகத்தோடு ஆயிரம் ஆண்டுகள் வாழ்பவனைப்போல... எனவேதான் என்னவோ நான் மண்ணுக்கு சொந்தமானவன் என்பதை நினைவுறுத்தி என் தலையில் சாம்பலை பூசுகிறார் கள் ஆறடிக்கு செல்லும் முன் ஆண்டவரிடம் செல்லச் சொல்லி நாற் பது நாட்களாவது நல்ல உபவாசம் ஆன்மாவில் செய்ய சொல்லி, என் சுயநல உலகத்தை சுற்றி எரிக்கச் சொல்லி, மற்றவர்களுக்குமோர் வேண்டுகோள். பாழடையும் உலகை புதுப்பிறப்பபை சொல்லி, தானும் இனிமையை பகிரச் சொல்லி. சுய இச்சைகளை கல்லறையில் அடக்கச் சொல்லி என் வாழ்வு மற்றவர்களுக்காகவும் வாழச் சொல்லி, என்னை உயிர்த்தெழச் சொல்லி இறைவார்த்தை என்னை சுட்டெரிக்கிறது.

...என்ற எனக்கு சாவு மணி அடிக்கிறது. மனம் மாற்றம் பெற ஆண்டவா வாழ்வா சாவா என்பதை நிர்ணயிக்க கருணையின் உறைவிடம் அழைப்பு விடுகிறது. கணித்து சொல்வேனா? நான் பணிந்து செல் வேண்டும் ...தம் புரிந்து அழைப்பு உணர்ந்து அன்பனாக வாழ வேண்டும் ... என் கையில். உயிர்ப்பும் என் வாழ்வில்.

என்றென்றும் அன்புடன்,
அருட்சகோ.தோமஸ் மத்தியூ C.M.S.F

# இலங்கை மாதாவைப்பற்றி அறிந்திடுவீர்

1940ம் ஆண்டு 2ம் உலகப்போர் மூண்டிருந்தது. இது இலங்கையையும் அழித்து விடுமோ என்று அஞ்சிய அன்றைய பேராயர் அதி.வந்.மேசன் ஆண்டகை, அன்னை மரியிடம் மன்றாடினார். அவ் இலங்கையை அழிவிலிருந்து பாதுகாத்தால், அன்னைக்குப் பெரிய பசிலிக்கா பேராலயம் ஒன்று கட்டுவேன் என்றும், அவவை 'இலங்கை அன்னை மரி' என்று பெயரிட்டு அழைத்து மகிமைப் படுத்துவேன் என்றும் நேர்த்திவைத்தார். மக்களையும் நாட்டுக்காக மன்றாடும்படி வேண்டினார். 1942ம் ஆண்டு ஏப்ரல் 15ம் திகதி பாஸ்கு ஞாயிறன்று கொடிய போர் விமானம் ஒன்று கொழும்பைச் சுற்றி வட்டமிட்டு நோட்டம் பார்த்தது. நகரத்தின் சில பகுதிகளில் குண்டுபோட்டு அழிக்கவென்னும் திட்டம் போட்டிருந்தனர் எதிரிகள். என்ன ஆச்சரியம், இந்தப் போர்விமானம் கொஞ்ச நேரத்தில் கொழும்பு நகரத்தைவிட்டுத் தூரமாகச் சென்றுவிட்டது.

இன்றும் இதை போர்வல்லோர்கள், புதுமையென்றே கூறுகின்றார்கள். பேராயர் அதி.வன்.மேசன் ஆண்டகை வைத்த நேர்த்திக்கடன், கர்தினால் தோமஸ் கூறேரினால் நிறைவேற்றப்பட்டது. 1943ம் ஆண்டு பெப்ரவரி 5ம் திகதி 12ம் பத்திநாதர் திருத்தந்தை "அன்னைமரியா இலங்கை அன்னை" என்று பிரகடனப்படுத்தினார். 1948ம் ஆண்டு, ஆனிமாதம் 11ம் திகதி மரியன்னை இலங்கை நாட்டின் பாதுகாவலி எனப் பிரகடனப்படுத்தினார்.

தேவத்தை பசிலிக்காவில் வைக்கப்பட்டுள்ள சரித்திரப்பிரசித்திபெற்ற திருச்சுருபத்தை வரைந்தவர் கருதினால் தோமஸ் கூறே ஆண்டகைதான். அன்னைமரியின் கரத்தில் குழந்தை இயேசு. குழந்தை இயேசு ஒருகையில் செபமாலையைப் பிடித் துக் கொண்டு, மறுகையால் அன்னை மரி யைச் சுட்டிக்காட்டுவதையும், செபமாலை தான் அன்னைமரியை அணுகும் வழி என்றும் காட்டப்படுகின்றது. அன்னை மரியும், தமது மறு கையினால் விடிவெள்ளியை அணிந்து கொண்டிருக்கும் குழந்தை இயேசுவைச் சுட்டிக்காட்டுவதாயும் அமைந்துள்ளது.

"தாரகையெனக்காட்டாய் உந்தன் தனயனாம் இயேசுவையே" என்னும் அடி "அலைகடல் ஒளிர்மீனே" என்னும் பழைய பாடலில் அழகாய், அர்த்தமாய் அமைந்துள்ளது. இயேசு, தமது தாய் மரியாவை விண்ணுக்குச் செல்லும் வழியாகவும், அவ்வழியை அடைய செபமாலை சொல்லிக்கொண்டே அடையாளம் என்றும் காண்பிக்கப்படுகின்றது. எனவே, நமது விண்ணை நோக்கிய இப் பூவுலகப் பயணத்திலே, இயேசு, மரி,செபமாலை, முக்கிய இடம் பெறவேண்டும் என்பது வெள்ளிடைமலையாகும். செமாலையைச் செபிப்போம். அதன் மறைபொருட்களை நம்வாழ்வாக மாற்றுவோம்.

அருட்சகோ. ஞா.மரியநாதன்.
(பு.பி.ம.ச)

## வாழ்க்கையென்பது

வாழ்க்கையென்பது போர்க்களம்
நம்பிக்கை என்பது ஆயுதம்
தோல்வியே முதல்படி
வெற்றியே அறிகுறி
தோல்வியே வெற்றிக்கு முதற்படி
அதில் இருந்து மீண்டு எழுவதே
வாழ்க்கையின் வெற்றி

S. இயேசுமணி
அசீசி இல்லம் குருக்கள் மடம்,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியை விதைத்து அமைதியை அறுவடையாக்குவோம்

# அழைத்தல் ஓர் கொடை

“எந்த இலக்கை நோக்கிய பயணத்துக்காகப் புறப்பட்டாயோ, அந்த இலக்கை அடைவதில் கண்ணாய் இரு; அதற்காக துணை செய்யும் வழிகளில் உள்ள அனுபவங்கள் இலக்கை அடைவதற்குப் பக்கபலமாக இருக்கவேண்டுமேதவிர தவறாக இடையில் கூடிய பற்றுறுதி கொண்டு இலக்கைத் தவறவிட்டுவிடாதே” என்ற செய்திகள் எம் பயணத்துக்கு மட்டுமல்ல, ஒவ்வொருவரது வாழ்க்கைப் பயணத்துக்கும் இலக்கை நிர்ணயித்து அதை அடையும் வழிகளை அனுபவப் பாடங்களாக உலக இளையோர் மகாநாட்டின் யேர்மன் பயணம் நல்ல படிப்பினைகளையே தந்தன.

அழைத்தலும் இவை போன்றதே. அந்த இலக்கு நோக்கிய பயணத்தில் பலருக்கு பல சந்தர்ப்பங்கள் தரப்படும். இவை இறைவனின் திருவிளையாடலே. இதில் இடைத்தங்கலாய் தங்க வைப்பதும், திசை மாறித் திண்டாடுவதும், தீர்மானம் எடுக்க முடியாது தத்தளிக்கும்போது திசைதிருப்ப பல்வேறு சோதனைகள், பல வடிவங்களில் முன்வரலாம். இவற்றுக்கு பணம், பதவி, குடும்பம், சுகபோகவாழ்வு, பொறுப்புகள், இடைக்கால மாலை கள் நிறைவைத்தர லாம். இலட்சிய பயணத்தை தடுக்கலாம். அதுவே நிம்மதியை தர முடியாது.




என்பதனை மனம் தளர் ந்து இடறல்படும் பலரது வாழ்வு மாற்றமடைவது நல்ல சான்றாகும். பயணங்கள் தொடர்கின்ன. பல மடைகின்றன. தொடர்புகள்,நட்புகள்அழைத்தலில் இறைவன் தந்த கொடைகள்தான் என்பதனை உணர, உணர்த்த பல சந்தர்ப் பங்கள் தரப்பட்டன.

இதுவே இலக்கு நோக்கிய பயணத்தின் இறுதிக்கட்டம். உலக இளையோர் மகாநாட்டில் புனித பிரான்சிஸ்கன் சகோதரர்களாக பங்குபற்ற கிடைத்த அதி உன்னத அழைப்பு இப் பயணத்துக்கு எமது சபையின் பிரதிநிதியாகச் செல்ல ஒழுங்குகளை செய்த பெண்மணி மாட்டின் பெவர் தன் வாகனத்தில் இருந்து DUSSELDORF சென்போல் ஆலயத்துக்கு 15 ஆம் திகதி இரவு 11 மணிக்கு கூட்டிச் செல்கிறார். எங்கோ பிறந்தவர், எங்கோ வாழ்பவர், எமக் காக உதவுகிறார். அதில் திருப்தி காண்கிறார். அதைத் தமது கடமையாக ஏற்றுச் செயற்படுகிறார். நாம் என்ன கைம்மாறு செய்யப்போகிறோம் என்ற எதிர்பார்ப்பில்லாத உதவும் மனமே எமது பயணத்தின் பலம்.

பல லட்சம் பேர் கூடும் உலக இளையோர் மகாநாட்டின் ஒழுங்குகள் எம்மை வியக்க வைத்தது. பங்குத் தந்தையர், தொண்டர்கள் மூலமும் DUSSELDOREF என்ற இடத்தில் பலரும் தங்கவைக்கப் படுகிறார்கள். எங்கள் 6 அருட்சகோதரர்கட்கும் தங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தன. பதிவுகளின்போது தரப்பட்ட ஒரு பெரிய பொட்டலம் (Bag) அதனுள் எமக்கான பஸ், ரயிலுக்கான பாஸ் (Pass) நிகழ்ச்சி நிரல் புத்தகம், நகர வரைபட விளக்கம், 3 நேர உணவுக்கான படிவங்கள், தண்ணீர் பொட்டலம், தொப்பி, விரிப்புகள் யாவும் அடங்கியிருந்தன. 15 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை எங்கும் செல்லவும் உணவுகள் தங்குமிடங்கள் யாவும் இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்டது. மிக சனக்கூட்டத்தின் மத்தியில் சலசலப்பில்லாது பணிகள் நடக்கிறது.

மூவிராசாக்களை வால் வெள்ளி வழிகாட்டி சென்றதுபோல் அந்த வால்வெள்ளி சின்னத்துடன் எங்கள் வழிகாட்டல் பரிசுப் பொட்டலங்கள் பெற்று சுமந்து செல்கிறோம். எங்கே? எப்படி? யாரைத் தேடிச் செல்கிறோம்? என்ற கேள்வி எழும்போது வால்வெள்ளி சின்னம் எம்மை வழிகாட்ட நாம் “இறைவனை மக்கள் மத்தியில் தேடவேண்டும்” என எல்லோரும் ஒரே தேடலில் அந்தச் சனக்கூட்டத்தில் தேடலைத் தொடங்கினர். எல்லோர் பார்வையும் தேடலை வெளிப்படுத்த அங்கோ புதிய வேற்றுமொழி, நாடு, பண்பாடு, சூழலில் நல்லுறவு, இறை அரசின் அன்புத் தேடலாய் மூவிராசாக்களின் பொருட்கள் COLOGNK COTHEORAL CHURCH கதீற்றல் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. அதே அடிப்படையில்தான் நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தன.

அந்த அழகாபுரியில் அற்புத சந்திப்பை ஏற்படுத்திய திருச்சபையன் திட்டங்கள் நடைமுறையில் அரங்கேறும் காட்சியில் அவ்வூர் மக்கள் அக்களிப்புடன் ஈடுபட்டனர்.

16,17,18 ஆம் திகதிகளில் ஒவ்வொரு நாளும் சென்போல் ஆலயத்தில் காலை 7.30 மணிக்கு காலை வழிபாடுகள் தங்கள், தங்கள் மொழிகளில் உலக இளையோர் ஈடுபடுவார்கள். உற்சாகமான சந்தோஷமான மணி ஒலி இறை வழிபாட்டுடன் காலைப் பொழுது விடியும். 8 மணிக்கு காலை உணவு அருகில் உள்ள மைதானத்தில் சிரமமின்றி நடக்கும்.

காலை 10 மணிக்கு புனித எலிசபெத் ஆலயத்தில் நல்லிணக்க வழிபாடுகளும், மறை ஆய்வு வகுப்புகளும், சகலருக்கும் நடைபெறும். இவற்றில் திருப்பலி வழிபாடு முக்கியத்துவம் பெறும். தேவ அழைத்தலுக்கான சிறப்புரைகளும் இளையோரின் மனங்களை ஒரு நிலைக்குள் ஈடுபடுத்தி இறை தேடலைத் தூண்டும்.

குழு ஆய்வுகள் அறிமுகங்கள், தமது நாட்டு பண்பாடு, தனித்துவமான ஆன்மீகத் தேடலுடன் நல்லுறவு புரிந்துணர்வுடன் இறை அன்பை சுவைக்கும் அனுபவத்தை உணரவைத்து இறை உறவில் இணைக்கும் திருப்பலி வழிபாடுகள் நாட்டுக்கு நாடு வேறுபட்டதாக மொழியால், பண்பாட்டால் வழிபாட்டுமுறைகளால் சிலர் சத்தமாகவும், சிலர் மௌனித்தும், சிலர் ஆடல் பாடலுடன் கொண்டாட்டமாக இருப்பதே புதிய அனுப வமாக எம்மைச் சிந்திக்க வைக்கும்.

மேல் நாட்டு திருப்பலிகளில் அதிகமாக பாடல், ஆடல் மூலமே பதி லளித்து பங்கேற்று ஒன்றாகி விடுகிறார்கள். சந்தோஷத்தில் உள்ளம் மகிழ்ந்து துதிப்பதையும், பேதங்கள் மறந்து ஒன்றித்து இருப்பதையும், எம்மவர்க்கு களியாட்டமாகப்பட்டாலும் அவர்களின் கலாசாரம், அவர்கள் வழிபாட்டிலும் இணைந்துள்ளதை வெளிப்படுத்தியது. பரலோக மந்திரம் பாடி, சமாதானம் பகிரும் காட்சிகள், சமாதானத்தின் முத்தம் அவர்களின் உள் ளன்பைப் பகிரும் இறை வழிபாட்டின் சிறப்பை வெளிப்படுத்துவதைக் காணமுடியும்.

எமது நாட்டின் வழிபாடுகள் மௌனித்தும், பக்தியுடனும் இருப்பதாகக் கொண்டாலும், பங்கேற்காத பக்தரையம் இணைத்துக்கொள்ளும் மேற்கத்தைய வழிபாடு வித்தியாசமானதாகவே வெளிப்பட்டது. சமாதானப் பகிர்வுகள் எம் மத்தியில் சில சமயம் சுவர்களுக்கும், மரங்களுக்கும், சிலருக்கு மனமில்லாமலும், யாருக்கு சொல்கிறோம் என்று தெரியாமலும் சமாதானம் சங்கடப்படுவதைப் பார்க்கும்போது அர்த்தமுடன் திருப்பலியில் பங்கேற்று பயன்பட இறை உறவை வலுப்படுத்த முகம் பார்த்து சமாதானத்தைப் பகிர்ந்து கொள்ள புன்சிரிப்பால் கூட இறை அன்பைப் பகிர முடியாதா என்ற கேள்விகள் எம் மனதில் எழும்.

திருப்பலி நிறைவு 2 மணிவரை நீடிக்கும். 3 மணிக்கு R.HEINPARK ஆற்றங்கரை அருகே உள்ள மைதானத்தில் கலை கலாசார இசை நிகழ்வுகள் மிக உற்சாகமாக தமது மொழிகளில் வெளிப்படுத்துவார்கள். அதற் குள் பிறநாட்டு நண்பர்




களுடனான நட்பு உரையாடல்கள் ஒரே உலகம், ஒரே திருச் சபை, ஒரே குடும்பம் என்ற உணர்வுடன் நல்லுற வில் கிறிஸ்து வின் உறவில் சங்கமமாகிய பொழுதுகளாக விரியும்.

DUSSETDROF இல் உள்ளவர்கள் இரண்டாம் நாள் கேக் Party என ஒரு குடும்பத்துக்கு இரண்டு கேக் பார்சல்கள் வீதம் கொடுத்து சகல இளையோரும் இன்புற்று பகிர்ந்து மகிழ்ந்த காட்சி (CAKE CELEBARA- TION) ஒன்றுகூடலின் சிறப்பை வெளிப்படுத்தியது. ஒவ்வொருநாளும் இரவு 9.30 மணிக்கு நிகழ்ச்சிகள் நிறைவுற்று தம் தங்கு-மிடங்களுக்கு திரும்புவார்கள்.

இந்த ஒன்றுகூடல்கள் எமது பங்கு மட்ட திருவிழாக்களில் முன்னைய காலங்களில் விருந்துப் பகிர்வுகளாக கலை நிகழ்ச்சிகளாக, விளையாட்டு நிகழ்வுகளாக, கலாசார கூத்து அரங்குகளாக கிராமமே கூடி மகிழ்ந்த பழைய நிகழ்வுகளை நினைவூட்டின. எந்த நிகழ்வுகளிலும் எமது நாட்டு இளையோர்களின் சிறப்பினை வெளிப்படுத்த சந்தர்ப்பங்கள் அருகி வருவதும், இளையோர் அன்னியப்பட்டு பார்வையாளராக மாறுவதும் தமது கைப்பொம்மைகளாக இருப்போரை மட்டும் வைத்து கடமைகளை நிறைவேற்றி தப்பிப்பதும் தவறான வழிகாட்டல்களின் வெளிப்பாடுகளாகவே எம் மண்ணில் வளரும் நிலை கவலைதரும்.

இளையோர் உருவாக்கம் எந்த நாட்டிலும் முக்கிய தளமாக இருப்பதை உலக இளையோர் தின பங்களிப்பில் கலந்துகொண்ட பிறநாட்டு இளையோரின் ஆர்வம் வெளிப்படுத்தின. எம் நாட்டு இளையோருக்கு அப்படியான சந்தர்ப்பங்கள் அருகி இருந்தமைக்கு அவர்களின் உருவாக்க உறவாடல்கள் தளர்ந்து இருப்பதும், உற்சாகப்படுத்த வழிகாட்டிகளிடையே உள்ள அலட்சியப் போக்கும் காரணமாக இருக்கலாம் எனத் தோன்றியது. பக்தியின் பங்காளராக இளையோர் உருவாக்கப்பட்டாலே ஆன்மீக அழைத்தலும், அன்புள்ள சமூகமும் மலர இளை யோர் சக்தி பயனுள்ளதாக அமையும் என்பதை பிறநாட்டு இளையோரின் ஆர்வ வெளிப்பாடுகள் புதிய சக்தியாகவெளி ப்பட்டன.

தன்னம் பிக்கையும், சுய பொறுப்புமுள்ள இளை




யோருக்கு நல் வழிகாட்டிகளின் நல்லுறவில் உயர்வு பெற்ற ஒருசிலரது வாழ்க்கை எம்மண்ணிலும் பிரகாசித்த போதும் அவை முழுமையாக பலமுள்ளதாக பயன்படுத்த பொறுப்புகள் பகிரப் பட்டு ஆன்மீக பற்றுறுதியில் தம்மை ஈடுபடுத்தும் இளையோர் பலமே எதிர்கால நற் சமூகம் என்பதை உலக இளையோரின் மகா நாடு நம்பிக்கையூட்டின. படிப் பினையாகின் றன.

19 ஆம் திகதி COLOGNE இல் உள்ள பேராலயத்தில் மூவிராசாக்களின் பரிசுப் பொட்டலங்கள் இருக்கின்றன. அங்குதான் இன்று பயணம் செபமாலைப் பேரணி யாக தங்கள் மொழிகளில் தங்கள் குழுக் கள் சகிதம் பக்தி பரவசத்துடன் பாடல்கள் பாடி அமை தியான இறை தேடல் பயணம் தொடர்கின்றன. பச்சைப் பசேலென விவசாய வயல்வெளி நடுவே 8 லட்சம் இளையோர் சக்தி, ஆன்மீக பக்தி வெள்ளம் கண்டு குதூகலிப்பதில் இயற்கையும் இணைந்து மழையாகப் பொழிய மக்கள் வெள்ளம் மழை வெள்ளத்துடன் சங்கமித்தது. மாலை முழுவ தும் மக்கள் கூட்டம் மழையில் நனைந் தது. அவ் வூர் மக்களும் இணைந்து நகரமே சந்தோஷ மழையால் நிறைந்து வழிந்தோடின.

செப கீதங்களுடன் சென்ற மக்கள் புகையிரத நிலையம், பஸ் போக்குவரத்தில் சென்ற மக்களுக்கு உதவுவதில் ஈடுபட்ட மக்களின் ஆர்வம் பங்கேற்பு நல் வழிகாட்டிகளால் உருவாக்கப்பட்ட மக்கள் சக்தியை வெளிப்படுத்தின. அர்ப்பணிப்புள்ளோரால் அகமகிழ்ந்த புனித பூமியாக மாறிய ஜேர்மன் நாட்டில் இருந்து எமக்கு ஓர் பாப்பரசர் விடிவெள்ளியாகத் தோன்றக் காரணமானது என்பதனை செயலால் காட்டியது.

20 ஆம் திகதி COLOGNE (KOLN) உள்ள மரியன் பிளட் (MARIENF ELD) எனும் இடத்தில் உள்ள புகையிரத நிலையத்தில் இருந்து 8K.M தூரத்தில் உள்ள நெடும் பாதை. அதன் அருகே கோதுமை வெட்டப்பட்ட வயல் வெளி மத்தியில் நடைப்பயணம். 196 நாடுகளைச் சேர்ந்த 8 லட்சம் இளையோர் பக்தி வெள்ளத்தில் ஒன்றுகூடினர்.

இங்குதான் எமது கிறிஸ்தவர்களுக்காக இறைவனால் தேர்ந்து அருளப்பட்ட திருச்சபையின் மூலைக்கல் என புனித இராயப்பரின் வழி வந்த 265 ஆவது அருட்தந்தை 16 ஆவது ஆசீர்வாதப்பர் தன் சொந்த நாடான ஜேர்மனில் உலக இளையோரை நேரில் தரிசிக்கிறார். அந்த 8 லட்சம் இளையோரில் நானும் ஒருவன் என்று எண்ணும்போது இந்த அரிய சந்தர்ப்ப மகிழ்ச்சியை எப்படி வார்த்தைகளால் வடிக்கலாம் என திண்டா டுகிறேன். இதே மன உணர்வுடன் திண றியவர்களின் இதயக்கனத்தை 8 லட்ச இளையோ ரும் இறை ஆசீர் வேண்டக் காத்திருப்பதில் மெய்மறந்து செபிப்பதில் காண முடிந்தது.

அன்று இரவு நற்கருணை வழிபாடு திருத்தந்தை ஆசீர்வாதப்பரினால் வழிபாடுகள் நடாத்தப்பட்டது. பக்தி பரவசத்தில் நனைந்த மக்களின் இருப் பிடமும் மழை வெள்ளத்தின் ஈரலிப்பும் குளிராக வானத்தில் தோன்றிய ந ட்சத்தி ரங்கள் எப்படி பூமியில் காணமுடியுமா என்ற பிரமிப்பை ஏற்படுத்தியது.

இளையோரின் பக்தியின் சக்தியாக மெழுகுவர்த்தியின் ஒளி பிர காசங்கள் நட்சத்திரக் கூட்டமாக பூமியை நிறைத்திருந்தது.

வழிபாடுகள் நேரில் காண்பதுடன் அருகருகே பெரும் தொலைக்காட்சியூடா கவும் காண்பிக்கப்பட்டவண்ணம் இருந்தன. திருத்தந்தையின் வழிபாட் டுக்காக இளையோர் மத்தியில் பயணித்து அரங்கு சென்று வழிபாடுகளை இளையோரின் ஆன்மீக தாகத்தில் அருளுரையால் நனைத்து ஆசீர் வழங்கினார்.

அருளுரையாற்றிய பாப்பரசர் ஆசீர்வாதப்பர், இளையோராகிய நீங்கள் புது உலகைப் படைப்பதற்கு ஆசையும் உற்சாகமும் கொண்டவர்கள் என்பதை நான் அறிவேன். எனவே விசுவாசத்தில் நிலைத்து எமது வாழ்க்கையால் எமது குடும்பத்திலும் சமூகத்திலும் உள்ள ஒவ்வொருவருக்கும் சேவை செய்பவராக வாழ வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

தொடர்ந்து அருளுரை ஆற்றுகையில் வயோதிபர்கள், துன்புறுவோர் மட்டில் விசேட கவனம் எடுத்து சுயநல வாழ்வை விட்டு பிறர் நல வாழ்வின் மூலம் கிறிஸ்தவப் பணிகளைத் தொடரவேண்டும். கிறிஸ்தவ ஒன்றிணைந்த குழுவாக உற்சாகத்தோடு புது உலகை உருவாக்குவதில் முழு முயற்சியுடன் ஈடுபட்டு கிறிஸ்துவின் சாட்சியம் பகரவேண்டும் என ஆசீர் வழங்கினார்.


கிறிஸ்துவின் சாயலாக வாழும் ஒவ்வொரு இளைஞனுமே கிறிஸ்தவ உலகைப் படைக்கும் சிற்பியாகிறான், என்ற உணர்வை ஊட்டிய உலக கிறிஸ்தவ மகாநாட்டை நிறைவுசெய்து தமது நாடுகளுக்குச் செல்லும் இளையோர் மனங்களிலும் விசுவாசத்தில் நிலைத்து வாழ்வால் சாட்சியம் பகரவேண்டும் என்ற திடசங்கற்பத்துடன் பிரியா நினைவுகளுடன் உலகெங்கும் 129 நாடுகளுக்கு 8 லட்சம் இளையோரும் பிரிந்து சென்றனர்.

எனது பயணத்துக்கு துணைநின்று தூண்டிய எமது சபையோர்க்கும், உதவிய உள்ளங்களுக்கும் என் அனுபவத்தை ‘பாதை’ வழி பகிர கிடைத்த சந்தர்ப்பத்திற்கும் சிலரது உற்சாக மூட்டும் பாராட்டுக்கள், ஆலோசனைகள் எமது சபையின் முன்னேற்றங்களுக்கு என் றும் உரமூட்டும் என்ற உணர்வோடு இறை பணியில் உங்கள் செபங்களும் ஒத்துழைப்புகளுமே எமது பலமாகும் என வேண்டி பணித்தளம் செல்கிறேன். நன்றி.

உன் வாழ்வை இறைவன் தந்த அழைப்பாக ஏற்றுக்கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் பதிவுகள்



செட்டிகுளம் தொழில்நுட்ப கல்வி நிலையத்தின் அடிக்கல் நாட்டும் வைபவத்தில் மன்னார் ஆயருடன் பிரான்சிஸ்கன் சகோதரர்கள் கூடிநிற்கும் காட்சி.



பாதைப் பத்திரிகையை ஆர்வமுடன் படிக்கும் மாணவர்கள்.






செட்டிகுளத்தில் மாலைநேரக் கல்வி நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றும் பங்குத் தந்தையுடன் கூடிநிற்கும் மாணவர்கள்



மதுபோதைத் தவிர்ப்புக்கான மகஜரை யாழ்.செயலக மேலதிக அரசாங்க அதிபர் திரு.சிவசுவாமியிடம் கையளிக்கும் காட்சி.

# பாதை மடல்

### பயணக் கட்டுரையாக

"அழைத்தல் ஒரு கொடை" எம்மையும் ஒரு முறை ஜேர்மன் உதை இளையோர் மகாநாட்டுக்கு அழைத்துச் சென்றது போல் இருந்தது. சிலர் எத்தனையோ இடங்கள் சென்று பயிற்சி பெற்றாலும் மற்றவருக்குப் பகிர மாட்டார்கள். நீங்கள் மீண்டும் மற்றவர்களுக்குப் பகிரவேண்டும் என்று உணர்ந்து பயணக் கட்டுரையாக வெளியிட்ட மைக்கு பாதைக்கும், சபையினருக்கும் நன்றிகள்.

- அருள்பத்மா,
மன்னார்.

### மாதம் ஒருமுறை வருவாயா?

பாதை தாமதித்தால் பயணம் தாமதிக்கும்.
பயணம் தாமதித்தால் பலன்களும் தாமதிக்கும்.
தாமதியாது மாதம் ஓர் முறை
பாதையே நீ வழிகாட்ட வருவாயா?

-எஸ்.சர்மிளா,
பதுளை.

### புதிதாக இருந்தது?

"பிரான்சிஸ்கன் சகோதர சபைபற்றிய செய்திகள் பாதை மூலம் படித்தே அறிந்தோம். இப்படி ஒரு சபை எப்படியான பணிகளை ஆற்றுகிறது என்பதெல்லாம் எமக்கு புதிதாக இருந்தது. மேலும் உங்கள் பணிகள் சிறக்க வாழ்த்துகிறோம்" பாதை பத்திரிகை எமக்கு அனுப்பவும்.

-கிறிஸ்து இல்ல மாணவர்கள்,
ஊர்காவற்றுறை.

### பாதையை விநியோகிக்க

பாதை பத்திரிகை தொடர்ந்து எனக்கு பத்து தரவும் இதனை என் நண்பர்களுக்கு விநியோகித்து என் பங்களிப்பை செலுத்துகிறேன்.

S.S.செல்வராசா,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்.

### எங்கள் வீட்டில் ரகளை

எங்கள் வீட்டில் பாதை பத்திரிகை படிப்பதில் போட்டி, ரகளை அதிகம். எல்லா வயதினருக்கும் ஏற்ற விடயங்கள் தருகிற பாதைக்கு பாராட்டுகள்.

-அ.மரியநிலக்ஷி,
யாழ்ப்பாணம்.

### எழுதுங்கள் - பகிருங்கள்

எல்லோரையும் உற்சாகப்படுத்த முனைவது எமக்கு ஊக்கத்தைத் தருகிறது. நிறைகளை மட்டுமல்ல குறைகளையும் எழுதுங்கள். ஏன் உங்கள் சிந்தையில் மலரும் ஆக்கங்களையும் எழுதுங்கள். நண்பர்களுக்குப் பாதையை அறிமுகப்படுத்துங்கள்.

- ஆர்.

## அனைத்து மக்களும்...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

தொடர்ந்து இந்து மதகுரு உரையாற்றுகையில் எமது சமுதாயத்திற்கு பெரும் பலாபலனைக் கொடுக்கும் என்பது திண்ணம் அனைவரும் பலனடைய வழிவகுப்பது என்பதே தெட்டத்தெளிவாக அறிய முடிகின்றது. இதனையிட்டு நாம் பெருமை அடைகின்றோம் எந்தவித சரீர பண உதவியும்கூட செய்ய நாம் தயாராக உள்ளோம் எனத் தெரிவித்தார்.

சகல இனமத மக்களுக்கும் நல்வழிகாட்டும் நிலையமாக அமைய வேண்டும். என்றும் முன்னேற்றம் அடையும் சமூகமாக உருவாகவும் ஆசீர் கூறினார் இஸ்லாம் மத பிரதிநிதி அவர்கள் தொடர்ந்து செட்டிகுளப் பொலிஸ் அதிகாரி உரையாற்றுகையில் இது ஒரு முக்கியபணி. நான் அறிந்த அளவு இப்பிரதேசம் உதவி அற்ற முன்னேற்றம் இல்லாத தொழில் துறையில் வாய்ப்பு இன்றி காணப்படும் சமூகம் தவறான வழியில் செல்லாது நல்ல எதிர்காலம் மலர இப்படிப்பட்ட முயற்சி பெரிதும் உதவும் எனக்கூறினார்.

## இதய அஞ்சலி

### நாவண்ணன்

கவிஞன், கலைஞன், படைப்பாளி என்ற சிறப்போடு பல்வேறு தளங்களில் நின்று கத்தோலிக்க உலகில் பல பதிவுகளைத் தந்து மறைந்த அமரர் நாவண்ணன் ம.சூசை நாதனுக்கு எம் இதய அஞ்சலி.

### அமரர் இரஞ்சிதம் துரை ஆரோக்கியதாசன்



கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் திரு.துரை ஆரோக்கியதாசன் அவர்களின் அன்பு மனைவி அமரர் இரஞ்சிதம் துரை ஆரோக்கியதாசன் அவர்களின் பிரிவுத்துயரில் நாமும் இணைந்து கொள்கிறோம்.

அமரரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்து எமது இதய அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

# சமாதானம் அவசியமா?

இன்று எம் அனைவருக்கும் மிக அத்தியாவசியமானது சமாதானமாகும். சமாதானமின்றி வாழ்வில்லை எனக்கூறலாம். "யுத்தமில்லாத நாட்கள் மெல்ல மெல்ல மறைந்துகொண்டிருக்கின்றது.

இன்று யாருக்கு சமாதானம் தேவை? யுத்த களத்தை அண்மித்து வாழும் மக்களுக்கு மட்டும்தானா? இல்லை! எமது இலங்கை மண்ணிற்கும், எமக்கும் சமாதானம் தேவை. சமாதானம் தேவையென்றால் ஒற்றுமை, புரிந்துணர்வு, பகிர்வு, மன்னிக்கும் மனப்பாங்கு போன்ற நற்பண்பு களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

சமாதானம் மலர வேண்டுமென்றால் முதலில் சமாதானத்திற்கு தீர்வுகளைக் காண வேண்டும். சமாதானத் தீர்வு காண்பதென்பது இலகுவானதல்ல. அதில் பல பின்னடைவுகள், சவால்கள் ஏற்படலாம். ஆனால் சமாதான தூதுவர்களாகிய நாம் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் முன்மாதிரியாகச் செயல்படுவோம்.

"ஒன்றாகச் செபிக்கும் குடும்பம் ஒன்றாக வாழும்'' என்ற கூற்றுக்கிணங்க தாய், தந்தை, பிள்ளைகள் அன்பினால் கட்டுண்டு பரிசுத்த ஆவியின் செயலாற்றலுக்கு இடமளித்தல் வேண்டும். இவர்களிடையே ஒருவர் ஒருவரை புரிந்துகொள்ளும் தன்மை, பிரமாணிக்கம், பொறுமை, இரக்கம், ஏற்றுக்கொள்ளும் தன்மை ஆகிய நற்பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். அத்தோடு குடும்பத்தில் உள்ளார்ந்த மகிழ்ச்சியும் நிறைவான சமாதானமும் கிடைக்கும்.

இவ்வாறு சமாதானமாக வாழ்வதன்மூலம் இறைத்திட்டம் ஏற்றதாகவும், மூவொரு கடவுளின் அடையாளமுமாக விளங்கும் இதற்காக குடும்பத்தில் அனைவரும் செபத்திற்காகவும், தியானத்திற்கும், அருட்சாதன வாழ்வினை வளர்த்துக்கொள்ளுவதற்கும் ஆர்வத்தோடு செயற்பட வேண்டும்.

சமாதானத்திற்கும், அன்பிற்கும் உதாரணமாக மரியாளை எடுத்துக் கொண்டால் மரியாள் ஒரு மனையாளாகவும் ஒரு அன்பின் அடையாளமாகவும் ஒரு அன்னையாகவும் தனது கடமைகளை நிறைவேற்றினாள். குடும்பத்தில் சமாதானத்திற்கும், ஆன்மீக ரீதியான வளர்ச்சிக்கும் உழைப்பதில் முன் நின்றாள்.

எனவே நாமும் சாதி, மத, பேதமின்றி அனைத்து இனத்தவர்களும் ஒன்றாகவும், ஒற்றுமையாகவும் வாழ முயற்சிப்போம்.சமாதான தூதுவர் களாகிய நாம் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் முன்நின்று செயற்பட்டு எமது நாட்டின் சமாதானத்திற்கும் வீட்டின் சமாதானத்திற்கும் தேவ தாயாரிடம் மன்றாடுவோம். சமாதானத்தை கட்டியெழுப்புவதோடு எமது நாட்டில் ஒவ்வொருவரும் நற்பிரஜைகளாக வாழ முயற்சி செய்வோம்.

ஜே.சக்கேயு,
நவசன்னியாச இல்லம்,
வட்டக்களி, சிலாபம்.

## மனிதத்தை சிதைக்கும்...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

மக்களை சுரண்டி மனிதத்தை சிதைக்கும் மதுபோதையின் தாக் கம் மிகவும் அழிவை ஏற்படுத்து வதைக் களைய பலரது மனமாற்ற செயல்கள் நம்பிக்கை கீற்றை ஒளிர வைத்தன. இதன்பயனாக மன்னாரில் பணியாற்றும் மதுபோதை தவிர்ப்பு பணியில் ஈடுபடும் அருட் தந்தை வின்சன் பற்றிக் அடிகளாரும் அவரது குடிபோதை தவிர்ப்பில் மறுவாழ்வு கண்ட குழுவினரும், யாழ்.கியூடெக் நிறுவனக் குழுவினரும் இணைந்து செயற்பட்டனர்.

இவர்களில் சிலர் குருநகரில் இருந்து மன்னார் மறுவாழ்வு பயிற்சியில் கலந்து புது வாழ்வை தொடங்கியுள்ளார்கள். தொடர்பயிற்சிகளும், பக்தி முயற்சிகளும், அவ்வூரில் உள்ள மதுச்சாலைகள் அகற்றவும் மக்களுடன் ஒத்துழைத்த மதுச்சாலை உரிமையாளர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

மக்களின் மனிதச் சிதைவுக்கு காலாகும் செயல்களை இனம்கண்டு களையும் போதுதான் மாண்புள்ள மனிதத்துவம் மதிக்கப்படும் இறை அரசு மலரும் என்பதை மக்களுக்கு விழிப்பூட்டவைத்த மகாஞான ஒடுக்கப்பணிகள் தொடர்ந்து மனிதம் காக்க மக்களே விழிப்புடன் செயல்பட வேண்டும். இவை சகல மட்டத்திலும் இளையோர், சிறுவர், பொதுநிலையினர், மதப்பணியாளர்கள் நல்லுறவுடன் பங்கேற்கும் பணிகளே பல்வேறு சாத்தான் செயல்களிலிருந்து இறைசாயலில் வாழும் மனி தத்தின் புனிதத்தைக் காக்கமுடியும் இதில் ஒவ்வொருவரது பங்களிப்பு செயல்களும் ஆன்மீகத்தில் நிலைத்து அர்ப்பணிப்புடன் செயல்படுத்தலே ஆன்மீக விழிப்பூட்டலாய் அமையும் இதுவே மகாஞான ஒடுக்கத்தின் அறுவடையும் வெற்றியுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org